சர்வதேச இயற்கை பாதுகாப்பு தின சிறப்பிதழ்

வியாழக்கிழமை 28 ஜூலை 2022

# தமிழருவி

அருவி: 02 | சாரல்: 28

தமிழின் தலைநிமிர்வு




சர்வதேச இயற்கை பாதுகாப்பு தினம் ஜூலை 28



## உலர்ந்து போகிறதா உலகின் நுரையீரல்?

## இயற்கை எனும் பூமிப்பந்தின் இதயம்

## கறுப்பு சந்தையும் கறுப்பு ஆடுகளும்!

## நட்பு எனும் நல்லறம்

## முளை கட்டிய பயறு மூலிகைக்கு நிகர்!

## அன்று இராணுவ உடைக்கு இருந்த மரியாதை தற்போது இல்லை

ஜூலை 9 இல் சீருடையை கழற்றிய இராணுவ வீரர்

# நாடெங்கும் 24 மணிநேரத்தில் 4 கொலைகள்

நாட்டின் பல்வேறு பகுதிகளில் கடந்த 24 மணி நேரத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில் 4 பேர் உயிரிழந்துள்ளனர்.

அம்பலாங்கொட, கலகொட பிரதேசத்தில் நேற்று இரவு இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

வீட்டில் இடம்பெற்ற இறுதிச் சடங்கு நிகழ்வின் போது மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர் ஒருவர் டி56 துப்பாக்கியால் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், மற்றுமொருவர் பலப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார். அத்துடன், கம்பஹா மேல் நீதிமன்ற வளாகத்தில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த சமன் ரோஹித பெரேரா என அழைக்கப்படும் 'பஸ் பொட்டா' துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, இரத்மலானை சில்வா மாவத்தையில் உள்ள குடியிருப்பில் நேற்று இரவு நபர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கு கூ56 துப்பாக்கி பயன்படுத்தப்பட்டுள்ளது. 30 வயதுடைய ஆணின் சடலம் களுபோவில போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## கோட்டாபயவை நீதிமன்றில் ஆஜராகுமாறு அழைப்பாணை



நாடு வங்குரோத்து அடைய காரணமானவர்களுக்கு எதிராக விசாரணை நடத்த உத்தரவிடுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுவில் இருந்து தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை நீக்குவதற்கு உயர் நீதிமன்றம் தீர்மானித்தது.

எனினும், இந்த வழக்கில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸவை பிரதிவாதியாக பெயரிட்ட உயர் நீதிமன்றம், அவரை ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அறிவித்தல் பிறப்பித்தது.

கோட்டாபய ராஜபக்ஸ இறுதியாக வசித்து வந்த முகவரிக்கு அறிவித்தலை அனுப்புமாறும் நீதியரசர்கள் குழாம் உத்தரவிட்டது.

## நாளை காலிமுகத்திடலில் அரச அடக்குமுறைகளை கண்டித்து சிவில் சமூக அமைப்புகளின் கவன ஈர்ப்பு போராட்டம்!

மக்கள் போராட்டத்தில் அமைதிவழியில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் அரச அடக்குமுறைக்கு எதிராக, அனைத்து சிவில் சமூக அமைப்புகளும் நாளை (ஜூலை 29) காலை 10.00 மணிக்கு காலி முகத்திடலில் ஒற்றுமைக்கான பிரசன்னத்தை ஆரம்பிக்கவுள்ளது.



அனைத்து மதச் சகோதரிகள் மற்றும் பாதிரியார்கள், சிவில்சமூக அமைப்புக்கள், தொழிற்சங்க ஆர்வலர்கள் ஆகியோர் ஒன்றிணைந்தது மக்கள் போராட்டத்திற்கும் அதன் பங்கேற்பாளர்களுக்கும் இடையிலான ஒற்றுமையைக் காட்டுவதற்காக பங்கேற்க ஒருங்கிணைப்பாளர்களால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்த நாட்டில் உள்ள அனைத்து குடிமக்களின் உரிமைகளையும் பாதுகாக்க, 'குடிமக்களின் சுதந்திரத்திற்காக குரல் கொடுப்போம்' எனும் தொனிப் பொருளில் அடக்குமுறைகளுக்கெதிரான எதிர்ப்பை வெளிப்படுத்தும் கவன ஈர்ப்பு போராட்டம் நாளை இடம்பெறவுள்ளது என ஒருங்கினைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## ஜனாதிபதி மாளிகையில் மீட்கப்பட்ட பணத்தை எண்ணியவர் கைது!



காலிமுகத்திடலில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பல்வேறு வன்முறைகளில் ஈடுபட்டுள்ளதாக குற்றம் சாட்டி, அவர்களை கைது செய்யும் நடவடிக்கையை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

இந்நிலையில், கடந்த 9ஆம் திகதி காலி முகத்திடல் ஆர்ப்பாட்டத்தின் போது ஜனாதிபதி மாளிகையினை போராட்டக்காரர்கள் முற்றுகையிட்டிருந்தனர்.

இதன்போது அரச சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டில் சந்தேகத்தின் பேரில் 26 வயதான இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த போராட்டத்தின் போது ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிட்ட போராட்டக்காரர்களால் பெருந்தொகை பணம் மீட்கப்பட்டிருந்தது.

இவ்வாறு மீட்கப்பட்ட பணத்தினை நபரொருவர் எண்ணிக்கணக்கிட்ட காணொளிகள் சமூகவலைத்தளங்களில் வெளியாகியிருந்த நிலையில்,அந்த குழுவில் இருந்த சந்தேகநபர் ஒருவர் அடையாளம் காணப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளார்.

## அவசரகால சட்டத்தில் வடக்கில் செய்ததை தெற்கில் செய்ய முற்பட வேண்டாம்

### எரான் விக்கிரமரத்ன நாடாளுமன்றில் எச்சரிக்கை!

அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி அன்று வடக்கு மக்களுக்கு செய்ததை இன்று தெற்கு மக்களுக்கு செய்ய முற்பட வேண்டாம் என நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன எச்சரிக்கை விடுத்துள்ளார்.



நாடாளுமன்றத்தில் நேற்றையதினம் இடம் பெற்ற அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை அனைத்து பிரச்சினைகளுக்கும் மூல காரணியாக உள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

போராட்டத்தை தவறாக சித்தரிப்பதை அரசாங்கம் தவிர்த்துக்கொள்ள வேண்டும். போராட்டம் மற்றும் போராட்டகாரர்கள் தொடர்பில் தற்போது மாறுபட்ட கருத்துக்கள் குறிப்பிடப்பிடப்படுகிறது.

போராட்டத்தை தவறான முறையில் சித்தரித்து முன்னோக்கி செல்வதை அரசாங்கம் தவிர்த்துக் கொள்ள வேண்டும். சட்டத்திற்கு முரணாக செயற்படுபவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் எவ்வித மாற்றுக்கருத்தும் கிடையாது. பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மக்கள் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள். முறைமை மாற்றம் (சிஷ்டம் சேன்ஜ்) போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் எதிர்பார்க்கிறார்கள். நாடாளுமன்றமும் முழுமையாக மாற்றமடைய வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் ஜனாதிபதி மாளிகையில் உள்ள நீச்சல் தடாகத்தில் குளித்தமை தவறானது என ஆளும் தரப்பினர் பிரதம கொறடா குறிப்பிட்டார். அவ்வாறாயின் கப்பம் பெறல், மண் அகழ்தல், காடழித்தல் உள்ளிட்ட விடயங்கள் குற்றமில்லையா என கேள்வி எழுப்பியுள்ளார்.

## காலிமுகத்திடலில் தேரர்களின் கூடாரங்கள் அகற்றப்பட்டன



காலி முகத்திடலிலுள்ள பண்டாரநாயக்க சிலையின் அமைவிடத்திற்கு அருகிலுள்ள பௌத்த தேரர்கள் சிலரின் கூடாரங்களை அகற்றுமாறு பொலிஸார் இன்று மீண்டும் அறிவித்தல் வழங்கினர்.

குறித்த பகுதிக்கு சென்றிருந்த பொலிஸாருக்கும் தேரர்களுக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது.

தேரர்கள் அங்கிருந்து கூடாரங்களை அகற்றிவிட்டு செல்லாவிட்டால், கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டி ஏற்படும் என பொலிஸார் இதன்போது எச்சரிக்கை விடுத்தனர்.

இதனையடுத்து, எவருக்கும் பிரச்சினை கொடுக்க விரும்பவில்லை என தெரிவித்து, தேரர்கள் இன்று நண்பகல் 12 மணியளவில் தமது கூடாரத்தை அகற்றினர்.

## ஜனாதிபதி மாளிகையில் இருந்த பணம் எங்கே?

### ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவு

இளைஞர்கள் குழுவினால் ஜனாதிபதி மாளிகைக்குள் கண்டெடுக்கப்பட்ட பணத்தை உடனடியாக ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு இன்று நீதிமன்றம் கோட்டை பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது, இந்த பணம் கடந்த 9ம் தேதி ஜனாதிபதி மாளிகைக்குள் சிக்கியது.

பணம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதுடன், பணத்தை உடனடியாக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு கோட்டை நீதவான் திலின கமகே கோட்டை பொலிஸ் நிலைய அதிகாரிக்கு உத்தரவிட்டுள்ளார். 17.850,000.00 ரூபா கோட்டை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கோட்டை பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

கையளிக்கப்பட்டு மூன்று வாரங்கள் கடந்துள்ள போதிலும், பணம் தொடர்பில் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை என நீதவான் சுட்டிக்காட்டினார்.

எனவே, பணத்தை நீதிமன்றத்தில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்பட்டது. இதேவேளை, ஜனாதிபதி மாளிகைக்குள் காணப்பட்ட பணத்தை எண்ணிக்கொண்டிருந்த நான்கு இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

சந்தேகநபர்கள் நால்வரையும் தலா 5 இலட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

# ராஜபக்சக்களை புறந்தள்ளி புதிய இடைக்கால சர்வகட்சி அரசு அமைவதே நாட்டுக்கு நல்லது!

## சந்திரிகா தெரிவிப்பு

புதிதாக அமையவுள்ள சர்வகட்சி அரசின் அமைச்சரவையில் ராஜபக்சக்கள் எவரும் அங்கம் வகிக்கக்கூடாது. அவர்களுடைய ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியும் ஆதிக்கம் செலுத்தக் கூடாது. அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கியவாறு சர்வகட்சி அரசு அமைவதே நாட்டுக்கு நல்லது.

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார். இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இருவரையும் மக்கள் விரும்பவில்லை. இதனால்தான் மக்கள் நாடெங்கும் போராட்டம் நடத்தினார்கள். புதிய ஜனாதிபதியை பாராளுமன்றம் தெரிவு செய்துள்ளது. புதிய பிரதமரை ஜனாதிபதி தனக்குரிய அதிகாரத்தைப் பயன்படுத்தி தெரிவு செய்துள்ளார்.



இந்த நிலையில், இடைக்கால சர்வகட்சி அரசு அவசியம். தனியொரு கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஆட்சியைக் கொண்டு நடத்த முடியாது.

அனைவரது ஒத்துழைப்பும் ஆலோசனைகளும் மிகவும் அவசியம். ஆளும் தரப்பு, எதிர்த்தரப்பு என்ற பேதம் இல்லாமல் சர்வகட்சி அரசு அமையவேண்டும்.

இதேவேளை, புதிய பிரதமர் தொடர்பில் சர்வகட்சி அரசு தான் தீர்மானிக்க வேண்டும் என்றார்.




**செய்தி:-**

*வாரத்துக்கு மூன்று முறை இடம்பெற்ற சந்திப்புகளில் முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்சவுக்கு அமெரிக்க தூதுவர் ஜூலி சங் மனரீதியான அழுத்தம் பிரயோகித்தார்.*

விமல் வீரவன்ச
(நாடாளுமன்றில் இன்று)

ஒரு மனுசன் வீட்டுலயும் அழுத்தம் வெளியிலயும் அழுத்தமெண்டா என்ன செய்யுற?

# சமூக ஊடக செயற்பாட்டாளர் பாத்தும் கேர்னர் கைது



சமூக ஊடக செயற்பாட்டாளர் பாத்தும் கெர்னர் கொழும்பு குற்றப்பிரிவினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஜூலை 13 ஆம் திகதி பொல்துவ சந்திக்கு அருகில் நாடாளுமன்ற வீதிக்கு அருகில் இடம்பெற்ற அத்துமீறல் சம்பவங்கள் தொடர்பிலே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை பொலிஸ் தலைமையகத்திற்கு அண்மையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது பொதுச்சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை தொடர்பில் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலானமாணவர் ஒன்றியம் மற்றும் கோட்டகோகமவின் செயற்பாட்டாளரான அந்தோனி வெரங்கபுஷ்பிகா கொழும்பு தெற்கு பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று கைது செய்யப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கலைப்பீட இரண்டாம் வருட மாணவர்கள் 18 பேருக்குத் தற்காலிக வகுப்புத் தடைவிதிப்பு

பல்கலைக்கழக புதுமுக மாணவர்களை ஒன்றுகூடல் எனக் காங்கேசன்துறைப் பகுதிக்கு அழைத்துப் பகிடிவதைக்கு உட்படுத்தினார்கள் எனும் குற்றச்சாட்டை அடுத்து, பல்கலைக்கழக உள்ளக விசாரணைகளைத் தடையின்றி மேற்கொள்ளவே 18 மாணவர்களுக்கும் தற்காலிக வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# யாழில் ஆடி அமாவாசையில் மண் சட்டிகளுக்கு பெரும் தட்டுப்பாடு

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக பல்வேறு துறைகளின் செயற்பாடுகளும் கடுமையாக பாதிக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக அலுமினியம் மற்றும் பிளாஸ்ரிக் உள்ளிட்ட இறக்குமதிப் பொருட்களின் அதிகரித்த விலையேற்றம் காரணமாக மக்கள் மண்சட்டிகளை பயன்படுத்த தொடங்கியுள்ளனர்.


இவ்வாறான நிலையில் எரிபொருள் நெருக்கடி மற்றும் மண் பாத்திரங்களுக்கான உற்பத்திப் பொருட்களின் விலையேற்றம் போன்ற காரணங்களால் மண்சட்டிகளுக்கு தற்போது தட்டுப்பாடும் அதேவேளை அதன் விலைகளும் கடுமையாக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை இந்துக்களின் விசேட விரத



நாட்களுள் ஒன்றான ஆடி அமாவாசையை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் மண்சட்டிகளுக்கு பெரும் மசுவு ஏற்பட்டுள்ள நிலையிலும் மண்சட்டிகளுக்கு யாழில் தட்டுப்பாடு நிலவுவதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

# முச்சக்கர வண்டிகளை பதிவு செய்யுமாறு வவுனியா பொலிசார் கோரிக்கை




எரிபொருள் விநியோக நடவடிக்கையை ஒழுங்குபடுத்தும் முகமாக முச்சக்கர வண்டிகளை பதிவு செய்யுமாறு வவுனியா பொலிசார் அறிவித்துள்ளனர்.

எதிர்வரும் முதலாம் திகதி முதல் நடாளாவிய ரீதியில் முச்சக்கர வண்டிகளுக்கான எரிபொருளினை குறிப்பிட்ட சில எரிபொருள் நிலையங்கள் ஊடாக வழங்குவதற்கு எரிசக்தி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அதனடிப்படையில், குறித்த எரிபொருள் விநியோக செயன்முறையை ஒழுங்குபடுத்தும் வகையில் வவுனியா பொலிசாரால் அனைத்து முச்சக்கர வண்டிகளையும் தம்மிடம் பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. ஒலிபெருக்கி மூலம் குறித்த அறிவித்தலை வவுனியா நகரம் மற்றும் அதனையண்டிய பகுதிகளில் பொலிசார் அறிவித்து வருகின்றனர்.

# பெரிய நீலாவணையில் கடலில் அடித்துசெல்லப்பட்ட மாணவன் சடலமாக மீட்பு

**(கல்முனை)**

கடலலையில் சிக்கி இழுத்து செல்லபட்டு காணாமல் சென்ற பாடசாலை மாணவனின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் செவ்வாய்க்கிழமை(26) மாலை 3.30 மணியளவில் அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவில் உள்ள கடற்கரைப்பகுதியில் இடம்பெற்றுள்ளதுடன்

3 மாணவர்கள் பெரியதம்பிரான் ஆலய உற்சவ இறுதி நாளான அன்று தீர்த்தம் உற்சவத்தில் நீராடச் சென்ற போது கடல் அலையில் இழுத்து செல்லப்பட்டனர்.

இந்நிலையில் இரு மாணவர்கள் உயிர் தப்பிய நிலையில் கரை சேர்ந்ததுடன் மற்றுமொரு மாணவன் கடலுக்குள் இழுத்து செல்லப்பட்ட நிலையில் மாய



மானார். இவ்வாறு காணாமல் சென்ற பெரியநீலாவணை 1 பகுதியை சேர்ந்த 16 வயது மதிக்கத்தக்க இராசநாயகம் சனுஜன் என்ற மாணவனின் சடலம் புதன்கிழமை(27) மாலை கரை ஒதுங்கிய நிலையில் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு மரண விசாரணைக்காக எடுத்து செல்லப்பட்டுள்ளது. சுமார் 16 வயது மதிக்கத்தக்க பாடசாலை மாணவர்களே இவ்வாறு இவ்வனர்த்தத்தில் சிக்கிக்கொண்டதுடன் கடல் வழமைக்கு மாறாக கொந்தளிப்பாக காணப்பட்ட நிலையில் அதனையும் பொருட்படுத்தாது கடல் நீச்சலில் ஈடுபட்டிருந்தனர்.

வழமை போன்று குறித்த கடற்கரை பகுதிக்கு சென்ற நிலையில் இவ்வாறு கடலில் இழுத்துச் சென்றுள்ளது. இதில் இருவர் மீட்கப்பட்டதுடன் ஏனைய மாணவரை தேடும் பணியில் கடற்படையினர் கடற்தொழிலாளர்கள் உறவினர்கள் ஈடுபட்டிருந்த பின்னர் புதன் கிழமை (27) மாலை குறித்த கடற்பகுதிகளில் இருந்து சடலம் பொதுமக்கள் முன்னிலையில் மீட்கப்பட்டது. மேலும் சடலம் உடல்கூற்று பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்படவுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் பெரிய நீலாவணை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.




மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தினால் (மெசிடோ) மன்னார் மாவட்டத்தில் பொருளாதார நெருக்கடி காரணமாக பாதிக்கப்பட்ட பின்தங்கிய நானாட்டான், முசலி பிரதேச செயலாளர் பிரிவில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 400 குடும்பங்களுக்கு நிவாரணப் பொதிகள் வழங்கும் நடவடிக்கைகள் இன்று முன்னெடுக்கப்பட்டது.

# தமிழ் ஓலை

மின்னஞ்சல்: aruvitamil812@gmail.com
வாட்ஸ் ஆப் இலக்கம்: 0094 768 320 733

## அவசரகாலச்சட்டம் அவசரமாக அள்ளித்தெளித்த கோலம்!


அரசியல் பரபரப்புக்கள் , திகிலூட்டும் கைதுகள் ஊடகங்களுக்கு தீனி போடும் இவ்வேளை கடந்த 24 மணி நேரத்தில் நாடெங்கும் நான்கு கொலைச் சம்பவங்கள் அரங்கேறியுள்ளன. இத்தனைக்கும் நாடெங்கும் அவசரகாலநிலை அமுலில் உள்ளது. சட்டம் ஒழுங்கு பொதுமக்கள் பாதுகாப்புக்கென அவசரகாலச்சட்டம் அமுல்படுத்தப்படுவதாக கூறப்பட்டாலும் இந்தக் கொலைகள் தடந்தேறிய விதங்கள் இந்த நாட்டில் சட்டத்தின் ஆட்சியை விளங்கிகொள்ள போதுமானதாகும். அவசரகால சட்டம் பாதாள உலகினரை பாதிப்பதில்லை என்பது மாறி மாறி வந்த அரசுகளால் எழுதப்படாத விதியாக தொடர்ந்திருக்கிறது.

சுதந்திரத்திற்கு பின் முதல் அவசரகாலச் சட்டம் 1953 ஆம் ஆண்டில் ஒரு கிலோ அரிசியின் விலை 25சதத்தில் இருந்து70 சதமாக அதிகரித்ததை தொடர்ந்து ஏற்பட்ட பொதுமக்கள் அமைதியின்மையின் பொருட்டு பிறப்பிக்கப்பட்டது.

தற்போது 1978ம் ஆண்டின் அரசியலமைப்பு அவசரகால சட்டத்தை பிறப்பிக்கும் நிறைவேற்று அதிகாரத்தை ஜனாதிபதிக்கு வழங்குகிறது. மாறிமாறி ஆட்சிக்கு வந்த அரசுகள் பலமுறை இதனை பொதுமக்களுக்கு எதிராக பிரயோகிக்க தவறவில்லை.

தற்போது பிறப்பிக்கப்பட்டுள்ள அவசரகாலச் சட்டத்தின் கரங்கள் பலமாக கடந்த ஆட்சிக்கு எதிராக கிளர்ந்தெழுந்த செயற்பாட்டாளர்களை நோக்கி நீள்வதை கடத்தல் பாணியிலான கைதுகளும் எச்சரிக்கைகளும் புலப்படுத்துகின்றன.பொதுமக்கள் மீது ஏவப்படும் சட்டமாக பல்வேறு அரசாங்கங்களால் செயற்படுத்தப்பட்டது கண்கூடு.

**கடந்தகாலங்களில் வடகிழக்கு மக்கள் கடந்த நெருப்பாறு இது . தற்போது அதன் சுவாலைகள் தென்னிலங்கையிலும் கொழுந்துவிட தொடங்கியுள்ளன அவ்வளவுதான் !**




# நிறைவேற்றுகிறது நிறைவேற்று அதிகாரம்

> ரணில் ஜனாதிபதியாக பதவியேற்ற அன்றிரவே காலிமுகத்திடலில் பாரிய படை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு பல பகுதிகளிலிருந்தும் போராட்டக்காரர்கள் துடைத்தெறியப்பட்டார்கள். இந்த நடவடிக்கைகூட ஒரு அராஜகமான— அதிகளவுக்குப் படைப் பலத்தைப் பயன்படுத்திய நடவடிக்கையாகத்தான் இருந்தது. அதற்கு உள்நாட்டிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் கண்டனங்கள் குவிந்தன. ரணில் எதனையிட்டும் கவலைப்படவில்லை. கண்டனம் தெரிவித்த வெளிநாடுகளின் தூதுவர்களையே நேரில் அழைத்து தனது செயற்பாட்டை அவர் நியாயப்படுத்தினார்.

**பவித்திரா**

**இலங்கையில்** அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தக் காரணமாக இருந்த கோட்டா கோ கம போராட்டக்காரர்களில் முன்னணி செயற்பாட்டாளர் ஒருவர் டுபாய் செல்லுவதற்காக சிறிலங்கன் விமானத்தில் ஏறிய பின்னர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சி.ஐ.டி.யினரால் கைது செய்யப்பட்டு பலவந்தமாக இழுத்துச்செல்லப்பட்ட காட்சியை நாட்டு மக்கள் அனைவரும் அதிர்ச்சியுடன் பார்த்தார்கள். விமானத்திலிருந்த பயணிகள் பலர் இந்த சம்பவத்தை தமது கைப்பேசிகளில் பதிவுசெய்து உடனடியாகவே பகிர்ந்திருந்தார்கள். விமானப் பயணிகளிலும் பலர் இந்தக் கைதை எதிர்த்தார்கள். ஆனால், எதனையிட்டும் கவலைப்படாமல் குண்டுக்கட்டாக கைதான தனிஸ் அலி என்ற அந்த முன்னணி செயற்பாட்டாளர் விமானத்திலிருந்து சி.ஐ.டி. அதிகாரிகளால் இறக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் இரண்டு செய்திகளை வெளிப்படுத்துகிறது. முதலாவது – போராட்டகாரர்களை வேட்டையாடுவதற்கு ரணில் விக்கிரமசிங்க தனது படைகளை களத்தில் இறக்கியுள்ளார் என்பது. இரண்டாவது – போராட்டத்தில் சம்பந்தப்பட்ட அனைவரது தகவல்கள்களும் முழுமையாக திரட்டப்பட்டு அவர்கள் சி.ஐ.டி.யினரால் பின்தொடரப்படுகின்றார்கள் என்பது.

இதன்மூலம் இந்தப் போராட்டம் மேலும் தொடர்வதற்கு இடமளிப்பதில்லை என்பதில் ரணில் தெளிவாக இருக்கின்றார். ஜனநாயகத்தின் மீது – கருத்துச் சுதந்திரத்தின் மீது தனக்கிருக்கும் நம்பிக்கையை வெளிப்படுத்தவும், தனது லிபரல் முகத்தைப் பாதுகாக்கவும் போராட்டத்தை நடத்துவதற்கு தடை இல்லை என அவர் கூறிவருகின்றார். ஆனால், அதற்கென ஒரு இடத்தை ஒதுக்கி – அதற்குள் அதனை முடக்கி பலவீனப்படுத்துவது அவரது உபாயமாகவுள்ளது. அதனால்தான் வீரமகாதேவி பூங்காவில் அதற்கென ஒரு இடம் ஒதுக்கப்படும் என அவர் அறிவித்திருந்தார்.

**உளவியல் ரீதியான அச்சமூட்டல்**

இதனைவிட மற்றொரு விடயமும் இதில் கவனிக்கத்தக்கது. முக்கிய செயற்பாட்டாளர்களைக் கைது செய்யும் போது வெறுமனே பிடிவிறாந்தை காண்பித்து அவர்களை கைது செய்வதற்குப் பதிலாக – அதனை ஒரு திகில் காட்சியாக காண்பிப்பதன் மூலம் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அச்சத்தை ஏற்படுத்த ரணில் முற்படுகின்றார். தனிஸ் அலியை கைது செய்யவேண்டுமானால் விமான நிலையத்துக்கு அவர் சென்றபோதே கைது செய்திருக்க முடியும். அல்லது வீட்டில் வைத்து கைது செய்திருக்க முடியும். ஆனால் விமானத்தில் ஏறவிட்டு விமானம் புறப்படத் தயாரானபோது திடுதிடுப்பென அதில் ஏறி கைது செய்வது என்பது அதிகளவுக்கு போராட்டக்காரர்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தும் உத்தியாகும்.



இதேபோன்ற ஒரு பாணியில்தான் அந்தோனி வெரங்க புஸ்பிக என்ற மற்றொரு முன்னணி செயற்பாட்டாளர் புதன்கிழமை கைது செய்யப்பட்டார். காலிமுகத்திடலில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு பேருந்தில் திரும்பிக் கொண்டிருந்த அவர், கோட்டை பகுதியில் வைத்து நீல நிற ஜீப் வாகனத்தில் வந்த இனந்தெரியாத குழுவினரால் வலுக்கட்டாயமாக கடத்திச் செல்லப்பட்டாரென சமூக ஊடகங்களில் தகவல்கள் வெளியாகியிருந்தன. எனினும் அவர் கடத்தப்பட்ட செய்தியில் உண்மையில்லை என குற்றப் புலனாய்வுத் துறையின் கொழும்பு தெற்கு பிரிவு பொறுப்பதிகாரி பின்னர் தெரிவித்தார். அவரை பொலிஸார் கைது செய்துள்ளதாகவும் அவர் கோட்டை பொலிஸாரால் அவர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார் என்றும் தெரிவித்தனர்.

வடக்கு– கிழக்கில் செயற்பாட்டாளர்களையும் ஊடகவியலாளர்களையும் ஒடுக்குவதற்காக கையாண்ட அதே உபாயத்தைத்தான் ரணில் அரசாங்கம் இப்போது தென்பகுதிகளிலும் கையாள முற்படுகின்றது. இது மக்களைப் பீதியில் ஆழ்த்துவதையும், போராட்டங்களிலிருந்து மக்களை விலகிச்செல்ல வைப்பதையும் இலக்காகக்கொண்ட ஒரு உபாயம்.

அதிகாரிகளை அரவணைத்தல். பாதுகாப்புத் தரப்பினர், அதிகாரிகள் இப்போது ரணிலுக்கு சார்பாக மாறிவிட்டார்கள் – அல்லது மாற்றப்பட்டுவிட்டார்கள் என்பதையும் இந்தச் செய்திகள் உணர்த்துகின்றன. கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்தபோது அவரால்கூட நாட்டிலிருந்து வெளியே செல்ல முடியாத நிலை இருந்தது. ஜூலை 12 இரவு அவர் டுபாய் செல்வதற்காக விமான நிலையம் வந்தபோது விமான நிலைய குடிவரவு – குடியகல்வுப் பகுதி அதிகாரிகள் ஒத்துழைக்க மறுத்தனர். அதனால் கோட்டாபய தமது பயணத்தை கைவிட்டு திரும்பிச்சென்றார். இதேநிலைமை பஸில் ராஜபக்சவுக்கும் ஏற்பட்டது.

ஆனால், இப்போது விமானத்தில் ஏறிய ஒரு முன்னணி போராட்ட செயற்பாட்டாளரை கைது செய்வதற்காக சி.ஐ.டி.யினர் சென்ற போது விமான நிலைய அதிகாரிகள் அதற்கு ஒத்துழைத்தார்கள். பயணிகள் சிலர் கைதை எதிர்த்த போதிலும் அதனைத் தடுக்கும் அளவுக்கு அது பலமானதாக இருக்கவில்லை. ஆக, படையினர், பொலிஸார், அதிகாரிகள் என அனைத்துத் தரப்பினரையும் ரணில்

மிகுதி 05 ஆம் பக்கத்தில்...

## இலங்கைக்கான நிதியுதவி;
# சர்வதேச நாணய நிதியம் புதிய நிபந்தனை விதிப்பு

இலங்கைக்கு தாம் நிதி உதவி வழங்குவதற்கு முன்னர், இலங்கை அதன் கடன் வழங்குநர்களுடன் ஒரு உடன்பாட்டை எட்ட வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியம் கோரியுள்ளது.

நேற்று மாலை ட்விட்டர் ஸ்பேஸ் கலந்துரையாடலின் போது கேள்விகளுக்கு பதிலளித்த சர்வதேச நாணய நிதியத்தின் தலைமை பொருளாதார நிபுணர் ப்யர் ஒலிவியர் கொவ்ரிஞ்சாஸ், இலங்கையின் நிலைமை குறித்து சர்வதேச நாணய நிதியம் கவலை கொண்டுள்ளது என்று குறிப்பிட்டார்.

இலங்கையில் கொடுப்பனவு சமநிலை நெருக்கடி ஏற்பட்டுள்ளது. அந்நியச் செலாவணி கையிருப்பு தீர்ந்துப்போயுள்ளது.

இதனால் அடிப்படைத் தேவைகள். மருந்துப் பொருட்கள் மற்றும் எரிசக்திக்கு பணம் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தநிலையில் பொருளாதார நெருக்கடி இலங்கையில் பாதிக்கப்படக்கூடிய குழுக்களில் ஏற்படுத்தும் தாக்கம் குறித்து சர்வதேச நாணய நிதியம் கவலை கொண்டுள்ளது என்று சர்வதேச நாணய நிதியத்தின் தலைமை பொருளாதார நிபுணர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் புதிய அரசாங்கத்துடன் சர்வதேச நாணய நிதியம் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. அவர்களுடன் இணைந்து பணியாற்ற விருப்பம் உள்ளது.

எனினும் சீனா உள்ளிட்ட கடனாளிகளுடன் இலங்கை கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தத்தை எட்ட வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியம் விரும்புவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே நேற்று சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய - பசுபிக் பிராந்திய பணிப்பாளர் கிருஸ்ணா ஸ்ரீவாசன் வெளியிட்ட கருத்து ஒன்றில், இலங்கை தமது கடன் வழங்குநரான சீனாவுடன் கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கை பேச்சுவார்த்தையை நடத்தவேண்டும் என்று தெரிவித்திருந்த நிலையிலேயே, சர்வதேச நாணய நிதியத்தின் தலைமை பொருளாதார நிபுணர், சீனா உட்பட்ட கடன் வழங்குநர்களுடன் இலங்கை பேச்சுவார்த்தை நடத்தி உடன்பாட்டை எட்ட வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

# குடிவரவு குடியகல்வு திணைக்களத்துக்கு ஜனாதிபதி ரணில் அதிரடி விஜயம்!
## டயானா கமகேயின் குற்றச்சாட்டுதான் காரணமா?

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று வியாழக்கிழமை காலை பத்தரமுல்லையில் உள்ள குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் பிரதான அலுவலகத்திற்கு அவசர கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த திடீர் வருகைக்கான காரணம் இதுவரை தெரிவிக்கப்படவில்லை.

நேற்றைய நாடாளுமன்ற அமர்வின் போது, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி டயானா கமகே உரையாற்றுகையில், கோட்டாபய ராஜபக்ச நாட்டை விட்டு வெளியேறு



வதற்கு சீல் வைக்காமல் அவருக்கு அசௌகரியத்தை ஏற்படுத்திய குடிவரவு அதிகாரிகள் மீது உடனடியாக விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று கோரினார்.

சம்பவத்தின் போது கோத்தபாய இலங்கையின் ஜனாதிபதியாக இருந்ததாகவும், ஒரு நிறைவேற்று ஜனாதிபதிக்கான அவர்களின் சேவையை அதிகாரிகள் மறுக்க முடியாது என்றும் உடனடியாக விசாரணை தேவை என்றும் அவர் கூறினார்.

ஜனாதிபதியாக தமக்கு இராஜதந்திர உரிமைகள் இருப்பதாகவும், முன்னாள் ஜனாதிபதி நாட்டை விட்டு வெளியேற முயற்சித்த போது அவரது கடவுச்சீட்டின் முத்திரையை ஒட்டாமல் சட்டத்தை கையில் எடுத்த குடிவரவு அதிகாரிகள் உடனடியாக இனங்காணப்பட்டு உடனடியாக விசாரணைநடத்தப்படவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். இந்தப் பின்னணியிலேயே ஜனாதிபதி இந்த விஜயத்தை இன்று மேற்கொண்டார்.

# 12 இலட்சம் பெறுமதியான மருந்துகள் ஜனாதிபதி மாளிகையில் திருட்டு



ஜனாதிபதி மாளிகைக்குள் வலுக்கட்டாயமாக பிரவேசித்த நபர்கள் அங்கிருந்த வைத்திய நிலையத்தின் மீது தாக்குதல் நடத்தி 12 இலட்சம் ரூபாவிற்கும் அதிகமான பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்துப் பொருட்களை திருடிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த மருத்துவ நிலையம் கடற்படையினரால் நடத்தப்பட்டு வருவதாகவும், கொழும்பு மத்தியப் பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இது தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி மாளிகைக்குள் பிரவேசித்தவர்கள் வைத்திய நிலையத்தினுள் நுழைந்து சொத்துக்களை சேதப்படுத்தியதுடன் அங்கிருந்த வைத்திய உபகரணங்கள் மற்றும் மருந்துப் பொருட்களையும் திருடிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடற்படையினர் இந்த முறைப்பாட்டை பொலிஸில் சமர்ப்பித்துள்ளனர்.

# இரண்டரை கோடி பேர் அனாதரவாக அமைச்சர்களோ அரசியல் சூதில்!
## சஜித் பிரேமதாஸ

250 இலட்சம் மக்கள் அனாதரவான நிலையில் இருக்கும் வேளையில் பாராளுமன்றத்தில் அமைச்சர்கள் அரசியல் சூது ஆடுகின்றனர் எனவும் 45 இலட்சம் மக்கள் வாழ்வாதாரத்தை ஈட்டும் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்துறையினர் ஆதரவற்ற நிலையில் உள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். குறித்த தொழில்துறையினர் சிரமங்களுக்கு ஆளாகியுள்ளனர் எனவும், அரசாங்கத்திலுள்ள எவரும் அது தொடர்பில் பொறுப்பல்லர் போன்றும் செயற்படுவதாகவும் தெரிவித்தார்.

சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்துறையினர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடு



வதற்காக இன்று கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்திற்கு சமூகமளித்த பிரதிநிதிகள் குழுவொன்றுடன் இடம் பெற்ற சந்தப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

கண்மூடித்தனமான சுற்றிக்கைகள் மூலம் பரெட் சட்டத்தை அமுல்படுத்துவதை அரசாங்கம் நிறுத்த வேண்டுமென வலியுறுத்திய எதிர்க்கட்சித் தலைவர், மக்கள் வாழ்வுக்கும் சாவுக்கும் இடையில் நெருக்கடியில் உள்ளனர் எனவும் தெரிவித்தார்.

அரசியல்வாதிகளுக்கும், கோடீஸ்வரர்களுக்கும், மோசடிக்கார்ர்களுக்கும் பிரப்பிக்கப்படாத பரெட் சட்டம், நாட்டின் பொருளாதார அச்சாணியை கையாளும் மக்களை இலக்காகக் கொண்டு பிரப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், நடுநிலையான சமூக ஜனநாயக சமூக சந்தை வாய்ப்பு நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் எனவும் தீவிர லிபரல்வாதம் தற்போது உலகம் முழுவதிலும் நிராகரிக்கப்பட்டு வருவதாகவும்அவர் மேலும் தெரிவித்தார்.

# வரலாற்றிலிருந்து படியுங்கள் இராணுவத் தீர்வு வேண்டாம்
## பாராளுமன்றத்தில் மனோ கணேசன்

இன்றையை பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வை கொடுங்கள். இராணுவ தீர்வை கொடுக்க முயலாதீர்கள். வரலாற்றில் இருந்து பாடம் படியுங்கள என நேற்று பாராளுமன்றத்தில் சுட்டிக்காட்டியுள்ள மனோ கணேசன் எம்.பி. புது பிரதமருக்கும், சபை முதல்வருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்ததுடன், இருவரும் கொழும்புகாரர்கள் என்பதில் எனக்கு மேலதிக மகிழ்ச்சி என்றும் குறிப்பிட்டார். அற்கு மேலும் உரையாற்றிய போது, இதோ, இந்த தருணத்தில் சபையில் வந்தமரும் மகிந்த ராஜபக்ச, 2009ம் வருடம் முடித்து விட்டதாக அன்று சொன்ன, பயங்கரவாதம், இன்று மீண்டும் திடீரென எங்கிருந்து வந்தது என தெரியவில்லை.

1970-80 களில் தமிழ் இளைஞர், தமிழ் மக்கள் தமது நியாயமான எதிர்பார்ப்புகளுக்காக 'அரகலய' என்று போராடினார்கள். முதலில் அமைதி போராட்டம்..! பின்புதானே ஆயுத போராட்டம்..? அவற்றுக்கு எதிராக அரசுகள்இராணுவ பலத்தைபாவித்தார்கள். அப்போது அதற்கு எதிராக தமிழ் எம்.பிகள் ஆற்றிய உரைகளைதான் இன்று நான் உங்களிடமிருந்து நான் கேட்கிறேன். இறங்கிருந்தபடி நான் அமைச்சர்விஜேதாசவிடம் கேட்டேன். எங்கே உங்கள் 'அரசியலமைப்பு திருத்த ஆவணம்' என்று கேட்டேன். அதுதான் அரசியல் தீர்வு என்றார்.

## மீண்டும் தீவிரமாக இயங்க காத்திருக்கும் நாமல்

தற்போது அரசியலில் இருந்து ஒதுங்கியிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ எதிர்வரும் டிசம்பர் மாதத்திற்குள் மீண்டும் தீவிர அரசியலில் பிரவேசிக்க தயாராகவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதற்குள் ராஜபக்ஷவுக்கு சமூகத்தில் தற்போது நிலவும் எதிர்ப்பு தணிந்துவிடும் என்று நம்புகிறார்கள். அதன்படி, கிராமம் கிராமமாக சென்று கட்சியை சீரமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.



# தானிஸ் அலி உள்ளிட்ட 21 பேருக்கு வெளிநாடு செல்வதற்குத் தடை!

ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்குள் நுழைந்து, ஒளிபரப்பு சேவைகளுக்கு இடையூறு விளைத்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டின் கீழ் கைதுசெய்யப்பட்ட தானிஸ் அலி உட்பட 21 பேருக்கு எதிராக வெளிநாடு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

கோட்டை நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. இதேவேளை, தானிஸ் அலி எதிர்வரும் ஆகஸ்ட் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நேற்றிரவு கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே முன்னிலையில் பிரசன்னப்படுத்தப்பட்டதன் பின்னரே அவர் இந்த உத்தரவை பிறப்பித்தார்.

04 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## நிறைவேற்றுகிறது நிறைவேற்று அதிகாரம்

தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதில் வெற்றிபெற்றுவிட்டர் என்பதைத்தான் இது உணர்த்துகின்றது. கோட்டாபய ராஜபக்சவைப் பொறுத்தவரையில் அதிகாரிகள், படைத்தரப்பினர் அவரது இறுதிக்காலத்தில் அவருக்கு முழுமையாக ஒத்துழைக்கவில்லை. அதனால், நாட்டைவிட்டுத் தப்பியோடுவதற்கு கூட கோட்டா பெரும் சிரமத்தை எதிர்கொண்டார் என்பது வாசகர்களுக்குத் தெரியும்.

ரணிலைப் பொறுத்தவரையில் ஜனாதிபதிப் பதவியில் அவர் இருக்கப்போவது இன்னும் இரண்டு வருடங்களும் சில மாதங்களும்தான். அதற்குள் பொருளாதார நெருக்கடிக்கு ஓரளவுக்காவது தீர்வை அவர் கொண்டுவந்தால் மட்டும்தான் அவருக்கும் அவரது கட்சிக்கும் எதிர்காலம் இருக்கும். பொருளாதார நெருக்கடியை ஓரளவுக்காவது தணிப்பதற்கு நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை அவசியம். 'ரணில் கோ ஹோம்' என போராட்டக்காரர்கள் தொடர்ந்தும் பேரணிகளை நடத்தி போராட்டங்களை நடத்திக் கொண்டிருந்தால் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த முடியாது. அதற்காகத்தான் அவர் இப்போது கைகளில் சவுக்கை எடுத்திருக்கின்றார்.

ரணில் ஜனாதிபதியாக பதவியேற்ற அன்றிரவே காலிமுகத்திடலில் பாரிய படை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு பல பகுதிகளிலிருந்தும் போராட்டக்காரர்கள் துடைத்தெறியப்பட்டார்கள். இந்த நடவடிக்கைகூட ஒரு அராஜகமான – அதிகளவுக்குப் படைப் பலத்தைப் பயன்படுத்திய நடவடிக்கையாகத்தான் இருந்தது. அதற்கு உள்நாட்டிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் கண்டனங்கள் குவிந்தன. ரணில் எதனையிட்டும் கவலைப்படவில்லை. கண்டனம் தெரிவித்த வெளிநாடுகளின் தூதுவர்களையே நேரில் அழைத்து தனது செயற்பாட்டை அவர் நியாயப்படுத்தினார்.

மேற்கு நாடுகள் அவருக்கு ஆதரவாக இருந்தாலும் நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த வேண்டுமானால் இந்தப் போராட்டங்கள் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என அவர் கருதுகின்றார். அதேவேளையில் ரணிலைப் பொறுத்தவரையில் அவர் ஒரு ஜனநாயகவாதி. லிபரல் போன்ற கருத்துக்கள் உள்நாட்டிலும் சர்வதேச ரீதியாகவும் உள்ளது. அதனையும் பாதுகாத்துக் கொண்டு போராட்டங்களையும் ஒடுக்குவதற்கான வியூகங்களைத்தான் அவர் வகுத்துக்கொண்டிருக்கின்றார். பாராளுமன்றத்தில் அவசரகாலச் சட்டத்துக்கு புதன்கிழமை கிடைத்த அங்கீகாரம் இந்த வகையில் அவருக்கு பலம் சேர்க்கின்றது. இதனைக் கொண்டு அவர் என்ன செய்யப்போகின்றார் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

# கலிபோர்ணியாவில் கட்டுக்கடங்காத காட்டுத்தீ

## 210 கிலோ மீற்றர்கள் வரை பேரழிவு



கடந்த சில நாட்களாக அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் கட்டுக்கடங்காமல் பரவி வந்த காட்டுத்தீ சுமார் 210 கிலோமீற்றர்கள் தூரத்தை ஆக்கிரமித்து பேரழிவை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில் காட்டுத்தீயிற்கு எதிராக தொடர்ந்து போராடி வந்த தீயணைப்பு வீரர்கள் தற்பொது மேற்படி காட்டுத்தீயினை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இன்னும் ஒரு சில நாட்களுக்குள் தீயை முழுவதும் கட்டுப்படுத்தி விட முடியும் என்ற நம்பிக்கை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மியன்மாரில் நான்கு அரசியல் கைதிகளுக்கு மரண தண்டனை நிறைவேற்றம்!

மியன்மாரில் சமூக செயற்பாட்டாளர், முன்னாள் நாடாளுமன்ற உள்ளிட்ட நால்வருக்கு ஆளும் இராணுவம் மரண தண்டனையை நிறைவேற்றியுள்ளது.

மியன்மாரில் ஆங் சான் சூக்கி தலைமையிலான ஆட்சி கவிழ்க்கப்பட்டு ஆட்சியில் உள்ள இராணுவத்தினர் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு நான்கு பேருக்கு தூக்குத் தண்டனையை நிறைவேற்றியுள்ளனர்.

இந்த மரணத் தண்டனையை ஆங் சான் சூச்சியின் ஜனநாயகக் கட்சி கடுமையாக விமர்சித்துள்ளது. ஆனால், தீவிரவாத தடுப்பு நடவடிக்கைகளின் கீழ் இந்த மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளதாக மியன்மார் இராணுவம் தெரிவித்துள்ளது.

ஆங் சான் சூகி-யின் தேசிய ஜனநாயக முன்னணி கட்சியை சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பியோ ஸெயா தா, ஜனநாயக செயற்பாட்டாளர் கியாவ் மின் யு, ஹியா மயோ ஆங், ஆங் துரா ஜா ஆகிய 4 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

பயங்கரவாதத் தாக்குதல் நடத்தியது, கொரில்லா தாக்குதல் நடத்தியது உள்ளிட்ட வழக்குகள் இவர்கள் மீது இருந்தன என்று அரச பத்திரிகையான 'மிரர் டெய்லி'யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதை இராணுவ அரசாங்கமும் உறுதிப்படுத்தியது. ஆனால், இவர்கள் எப்போது தூக்கிலிடப்பட்டனர் என்கிற விபரம் தெரிவிக்கப்படவில்லை.



இவர்கள் 4 பேருக்கும் பொது மன்னிப்பு அளிக்கப்பட வேண்டும் என அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் வலியுறுத்தியிருந்தன. ஆசியான் அமைப்புக்கு தற்போதைய தலைவர் என்கிற முறையில் கம்போடியாவும் வலியுறுத்தியிருந்தது. ஆனால், அரசியல் கைதிகள் 4 நான்கு பேருக்கும் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மியன்மாரில் 50 ஆண்டுகளுக்குப் பின்னர் முதல் முறையாக மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. மியன்மார் நாட்டுச் சட்டப்படி மரண தண்டனைக்கு அரசின் தலைவர் ஒப்புதல் அளிப்பது அவசியம். இதற்கு முன்னதாக 1976இல் மாணவர் தலைவர் சலாய் டின் மௌங், அப்போதைய இராணுவ ஆட்சியாளர்களால் தூக்கிலிடப்பட்டார்.

இந்த நிலையில், தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்ட நால்வரின் குடும்பத்தினரும் தகவல் அறிந்து சிறைக்கு வெளியே கூடியிருந்ததால் அங்கு பதற்றம் நிலவியது. குடும்பத்தினருக்கு தகவல் ஏதும் அளிக்காமல் தூக்குத் தண்டனையை நிறைவேற்றிய மியன்மார் இராணுவத்தை அந்நாட்டு மனித உரிமை அமைப்புகள் கடுமையாக கண்டித்துள்ளன.

# 'வோக் இதழ்' அட்டைப் படங்களால்

## சர்ச்சையில் உக்ரைன் அதிபர்





'வோக்' இதழின் அட்டைப் படங்களில் உக்ரைன் போர்க் காட்சிகளை உலகிற்கு காண்பிக்கும் வகையில் அதிபர் ஜெலன்ஸ்கியும், அவரது மனைவியும் இடம்பெற்றிருப்பது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

அக்டோபர் மாதம் வரவுள்ள வோக் இதழ் நேர்காணலில், உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி மற்றும் அவரது மனைவி ஒலனா நேர்காணல் இடம் பெற்றுள்ளது. அதில், தங்களது திருமண வாழ்வு முதல் உக்ரைனில் ரஷ்யாவின் ராணுவ நடவடிக்கை வரையிலான தகவல்களை உணர்வூப்பூர்வமாக இருவரும் பகிர்ந்துள்ளதாக வோக் இதழ் தெரிவித்திருக்கிறது. இந்த நிலையில் இதற்கான முன்னோட்ட படங்களை வோக் அதன் சமூக வலைதள பக்கங்களில் பகிர்ந்துள்ளது.

மேலும் இருவரிடம் நடத்தப்பட்ட நேர்காணலில், ஒலனா போரினால் பாதிக்கப்பட்ட இடங்களில் நிற்கும் புகைப்படங்களையும் வோக் இதழ் வெளியிட்டுள்ளது.


இந்தப் புகைப்படங்கள் தைரியதைத்தை காட்டுக்கின்றது என ஒருபக்கம் வரவேற்பு இருக்க, மறுபக்கம் போர் நடக்கும் நேரத்தில் இவை எல்லாம் அவசியமா என்ற எதிர்வினைகளும் எழுந்துள்ளன.

உக்ரைனின் மீதான ரஷ்யாவின் படையெடுப்பு 150 நாட்களை கடந்து நடந்து கொண்டிருக்கிறது. ரஷ்யாவின் கொடும் தாக்குதலில் உக்ரைனில் இது வரையில் 4800-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டிருக்கின்றனர். தங்கள் நாட்டில் இனி வாழ முடியாது என்ற நிலையில் வெளிநாடுகளுக்கு அகதிகளாக புலம்பெயரும் உக்ரைனியர்களின் எண்ணிக்கை ஒரு கோடியை நெருங்குகிறது. பொருளாதார ரீதியாகவும் உக்ரைன் மிகப் பெரும் இழப்பைச் சந்தித்து இருக்கிறது.

ரஷ்யாவுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் அந்நாட்டின் மீது பொருளாதாரத் தடைகளை விதித்தன. உச்சபட்சமாக, ரஷ்யாவின் கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயுவுக்கு தடைவிதிப்பதாக அமெரிக்கா அறிவித்திருக்கிறது. இந்த நிலையில் ஆரோக்கியமான பேச்சுவார்த்தைகளை முன் நகர்த்தாமல் ரஷ்யா - உக்ரைன் இடையே போர் நீடித்து வருகிறது.

# துருக்கி விமானத்தில் பரிமாறப்பட்ட உணவில் பாம்பின் தலை!





துருக்கி விமான நிறுவனத்தின் விமானத்தில் பரிமாறப்பட்ட உணவில் பாம்பின் தலை இருந்ததை கண்ட ஊழியர் அதிர்ச்சி அடைந்தார்.

விமானத்தில் பரிமாறப்பட்ட உணவில் இறந்த பாம்பின் தலை இருந்ததாக விமான ஊழியர் புகார் அளித்தார். இதை அடுத்து விமான நிறுவனம் உரிய விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது.

அதாவது, துருக்கி தலைநகர் அங்காராவில் இருந்து ஜெர்மனிக்கு கடந்த ஜூலை 21ஆம் திகதி புறப்பட்ட விமானத்தில் இச்சம்பவம் நடந்துள்ளது. அப்போது அந்த விமான ஊழியர் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது உருளைக்கிழங்கு மற்றும் காய்கறிகளுடன் சேர்ந்து பாம்பின் தலை உணவில் கலந்திருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தார். இதை வீடியோவாக எடுத்து அவர் டுவிட்டரில் பதிவிட்டார். சன் எக்ஸ்பிரஸ் என்ற விமான நிறுவனம் இந்த தகவலை அறிந்ததும் உடனடி நடவடிக்கைக்கு உத்தரவிட்டு உள்ளது.

இத்தகைய, செயல்பாடுகளை எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று தெரிவித்துள்ளது. மேலும் அந்த விமான நிறுவனத்துக்கு உணவு விநியோகம் செய்யும் நிறுவனத்தின் ஒப்பந்தத்தையும் நிறுத்தி வைத்துள்ளது.

மறுமுனையில் உணவு வழங்கும் நிறுவனம் தங்கள் நிறுவனத்திலிருந்து வழங்கப்பட்ட உணவில் பாம்பின் தலை இருப்பதை மறுத்துள்ளது. எங்கள் நிறுவனத்தில் சமைக்கப்படும் உணவுகள் 280 டிகிரி செல்சியஸ் வெப்பத்தில் சூடாக்கப்படுகின்றன. இந்த பாம்பின் தலை பாதி வெந்த நிலையில் இருப்பதன் மூலம், சமைத்த பின் வேறு யாரோ இதை வேண்டுமென்றே சேர்த்து இருப்பார்கள் என்று தெரிவித்துள்ளது. விமான சேவையில் 30 ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றி வருகிறோம். எங்கள் விமானத்தின் விருந்தினர்களுக்கு உயர்ந்த வசதிகளை செய்து தருவது எங்கள் நோக்கம்.

அவர்கள் வசதியாக பயணம் மேற்கொள்ள வேண்டும் என்பதே எங்கள் விருப்பம். இந்த விவகாரம் தொடர்பாக விரிவான விசாரணைக்கு நடைபெற்று வருகிறது என்று விமான நிறுவனம் தெரிவித்தது.

# பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவிக்கும் லேபனான்

பண வீக்கம் மற்றும் உணவுத் தட்டுப்பாட்டு, பட்டினி போன்ற பொருளாதார நெருக்கடிகளுக்குள் சிக்கி தவிக்கின்றது லெபனான் நாடு.

லெபனானின் அரசு கலைக்கப்பட்டு சுமார் ஆறு மாதங்களாக நிரந்தர அரசு ஒன்று இல்லாமையால் காபந்து அரசாங்கத்தை நடாத்தி வருகின்றார் பிரதமர் 'மிகாட்டி' அவர்கள்.

இந்நிலையில் லெபனானின் பொருளாதாரம் பாரிய சரிவை நோக்கி சென்று கொண்டிருக்கின்ற சூழலில் லெபனான் உலக வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகை எல்லை மீறி சென்று கொண்டு இருப்பதாகவும் கடன் தொகையான சுமார் 150 மில்லியன் அமெரிக்க டொலர்களை லெபனான் தற்போதைக்கு உலக வங்கிக்கு செலுத்தாமல் நிறுத்தி வைப்பதற்கும், மேற்படி நிதியில் தற்பொழுது நாட்டில் சுமார் 6 மில்லியன் மக்களின் பட்டினியைப் போக்குவதற்கான அத்தியவசிய தேவையாக இருக்கின்ற கோதுமையை இறக்குமதி செய்வதற்கான வாக்கெடுப்பு கடந்த செவ்வாயன்று பாராளுமன்றில் இடம் பெற்றது.

இந்த வாக்கெடுப்பில் கோதுமையை கொள்வனவு செய்வதற்கு முழு அவையும் சம்மதித்திருப்பதாகவும் எனவே அதற்கான உடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அதே வேளை இந்த விடயம் குறித்து உலக வங்கிக்கு தெரியப்படுத்தி கடன் எல்லையை மேலும் அதிகரிக்கும் செயற்பாட்டில் காபந்து அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாகவும் சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.



# முளை கட்டிய பயறு மூலிகைக்கு நிகர்!




**இறைவனால்** நமக்கு அளிக்கப்பட்ட அற்புத பரிசு தான் இயற்கை. அதன் படி நீர், நிலம், காற்று, ஆகாயம், நீர்வீழ்ச்சி, மலைகள் என இவை அனைத்தும் எம்மை பிரம்மிக்க வைப்பவையே. நாம் வாழும் பூமியானது பரந்து விரிந்த நிலப்பரப்புடன் அதனை சூழ சமுத்திரங்களையும், பச்சைப் பசேலென நீண்டு வளர்ந்த மரங்கள், அடர்ந்த காடுகள், உயர்ந்து வளர்ந்த மலைகள், சல சலவென ஓடும் நதிகள், அழகிய நீல வானையும் கொண்டது. பச்சைப் பசேலென புல்வெளிகள், பூக்கள், நீர்வீழ்ச்சிகள் உட்பட அனைத்து இயற்கை வளங்களும் மனிதர்களுக்கு மன அமைதி தருவன. இவ்வுலகில் வாழும் அனைத்து உயிரினங்களும் இயற்கையை சார்ந்தே வாழ்கின்றன. இத்தகைய சிறப்பு வாய்ந்த இயற்கை அழிந்து விட்டால் மனித இனம் உட்பட ஏனைய அனைத்து உயிரினங்களும் அழிந்து விடும். மனிதனால் தான் இயற்கை பெரும் அழிவை சந்தித்து வருகின்றது என்பது கசப்பான உண்மை, எனவே இயற்கையை காப்பது தனி மனிதர்கள் ஒவ்வொருவரினதும் தலையாய கடமை, மனிதர்கள் வாழ்வின் அனைத்து நிலைகளிலும் இயற்கையை பேணி, இயற்கை மருத்துவம், இயற்கை



பிரமிளா நாகேஸ்வரராஜா

வேளாண்மை, இயற்கை உணவு என இயற்கையோடு இணைந்து வாழும் வாழ்க்கை நமக்கும் ஆரோக்கியமானதாக இருக்கும். இயற்கை பாதுகாப்புக்கும், உணவுக்கும் என்ன சம்பந்தம் என்று நீங்கள் யோசிக்கலாம்?

செயற்கை அதிசயம் நிறைந்த உலகில் இயற்கை பாதிப்பினை சந்திக்கிறது.



இன்று நாம் தினம் தினம் உண்ணும் உணவுகளுடாக கொஞ்சம் கொஞ்சமாக நஞ்சை உட்கொண்டு வருகிறோம். இதற்கு இன்றைய உணவு உற்பத்தி தான் அடிப்படைக் காரணம். அசேதன பசளைகளின் பிரயோகம் இன்று மிதமிஞ்சிக் காணப்படுகிறது. இதனால் இயற்கையுடன் கூடிய சேதனப் பசளையின் முக்கியத்துவத்தை எமது விவசாயிகள் அறியாதுள்ளனர் அல்லது அறிந்தும் பயன்படுத்தாமல் உள்ளனர். இந்த அசேதன பசளைப் பிரயோகத்தை தடுத்து சுத்தமான நஞ்சற்ற உணவு உற்பத்திக்கு சேதன விவசாயம் செய்ய வேண்டும் அப்போது தான் மனித வர்க்கம் ஆரோக்கியமாக வாழ முடியும்.

சமீப காலமாக இயற்கை ஆர்கானிக் முறைக்கு மாறுவது குறித்து பேசி வருகிறோம். அதன் விளைவாக தற்போது பலரும் வீடுகளிலே இயற்கை உரம் தயாரித்து காய்கறிகள் மற்றும் பழங்களை விளைவிக்கின்றனர். பருவ கால மற்றும் உள்ளூர் தாவர அடிப்படையிலான உணவு தயாரிப்புகளுக்கு மாறுவதன் மூலம் வீட்டினர் புதிய ‘டயட்’ முறை ஆரம்பிக்கலாம்.



உடலை வலுவாக்க உதவும் ஏழைகளின் இறைச்சி இது. புரதச்சத்து அதிக அளவில் இருப்பதால் பயறு வகைகள் அசைவ உணவுக்கு இணையாக கூறப்படுகின்றன. அதிலும் இவற்றை சாதாரணமாக சாப்பிடுவதை விட முளை கட்டிய பயறு வகைகள் உடலுக்கு இரு மடங்கு ஆற்றலை வழங்கக் கூடியன. உடல் பலம் இழந்து சோர்வாக இருப்பவர்கள் முளைவிட்ட பயரை சாப்பிட்டு வர நல்ல புத்துணர்ச்சி கிடைக்கும். இளைஞர்கள், உடல் வலிமைக்காக உடற்பயிற்சி செய்பவர்கள், விளையாட்டு வீரர்கள், குழந்தைகள் பெரியவர்கள் என அனைவரும் சாப்பிட ஏற்ற அற்புதமான உணவு.

காய்கறிகள்,பழங்கள் இவை அந்தந்த பருவ காலங்களில் தான் கிடைக்கும். ஆனால், தானியங்கள் அப்படியல்ல அத்துடன் இந்த முளை கட்டிய பயரை செலவே இல்லாமல் வீட்டிலேயே எளிதாக தயாரித்தும் விடலாம். திட்ட உணவில் முளைக்க வைக்கப்பட்ட பயறுகளை சாலட் மற்றும் பச்சடி போன்ற உணவு வகைகளில் சேர்க்கலாம். இவை நீண்ட நேரம் வயிற்றை நிறைவாகவும் வைத்திருக்கும்.

## முளை கட்டச் செய்வது எப்படி?

முளை கட்டுதல் என்பது பயறுகளை ஒரு இரவு முழுவதும் நீரில் ஊற வைத்து, மறு நாள் நீரை வடித்து விட்டு ஒரு பருத்தித் துணியில் இட்டு தளர்வாக கட்டி தொங்க விட வேண்டும். இரண்டு அல்லது மூன்று முறை வெளிப்புறத்தில் நீர் தெளித்து விட்டு ஈரப்பதத்தில் வைத்திருக்க 8 மணி நேரத்துக்கு பிறகு பயறு முளை கட்டியிருக்கும்.

## இந்தவார சமையல் குறிப்பு

## முளைவிட்ட பச்சைப்பயறு புட்டு

### தேவையானவை

1 கோதுமை மா - 300 கிராம்
2 பசளிக்கீரை விழுது - 3/4 கப்
3 முளைகட்டிய பச்சைப்பயறு - 4 மே .க
4 தேங்காய் துருவல் - பாதி மூடி
5 உப்பு - 1/4 தேக்கரண்டி

### செய்முறை

பசளிக்கீரையை சுடு நீரில் இட்டு ஆறவிட்டு மையாக அரைக்கவும். பயரை முளை கட்டி எடுக்கவும். கோதுமை மாவை லேசாக வறுத்து பசளிக்கீரை விழுது மற்றும் உப்பும் சேர்த்து தேவைப்பட்டால் மட்டும் நீர் தெளித்து உதிரி உதிரியாக புட்டு பிசிறவும். புட்டுக் குழலை தயார் செய்து அடியில் தேங்காய்பூ துருவல் பிறகு முளை கட்டிய பயறு மீண்டும் தேங்காய் பூ , புட்டுமா என இந்த வரிசையில் தொடர்ந்து போட்டு ஆவியில் வேக வைத்து எடுத்து நெய் மற்றும் வாழைப்பழத்துடன் சாப்பிட்டுப் பாருங்கள்.

சொன்னால் புரியாது இதன் சுவை. ஆனால் சுவைத்தால் நிச்சயம் மறக்காது. நீங்களும் செய்து சுவை பாருங்கள்.



# உலர்ந்து போகிறதா உலகின் நுரையீரல்?




பிரியா இராமநாதன்





**சமீப காலமாகவே உலகம் வரலாறு காணாத இயற்கை பேரழிவுகளைச் சந்தித்து வருகின்றது. அதற்கு காரணம் மனிதனின் கண்மூடித்தனமான இயற்கை அழிப்பே. இயற்கையை நாம் அழித்தால் இறுதியில் அந்த அழிவுகளின் பாரிய விளைவுகளைச் சந்திக்கப்போவது மனித இனமே. இயற்கை நம்மை மட்டுமில்லாது, நம் சந்ததினரையும் நிச்சயம் அழிக்கும்.**

**ஒருபுறம்** உலக வெப்பமாதல் பிரச்சினை, மறுபுறம் அளவுக்கதிகமான மழைப்பொழிவு மற்றும் அதனால் ஏற்படும் வெள்ளப்பெருக்கு, மற்றொருபுறம் கடும் வறட்சி, சுனாமி, நிலநடுக்கம், காற்று மாசு, பனிப்பாறைகள் உருகுதல் கடல்நீர் மட்டம் உயர்வு, பருவமாற்றம் என உலகம் தனது இறுதிக் கால கட்டத்தில் நின்றுகொண்டிருக்கின்றது. இந்த இயற்கை மாறுதல்களுக்கும் பேரழிவுகளுக்கும் காரணம் யார் என்கிற கேள்விக்கு உலகம் முழுவதையும் தன் ஆளுகைக்குள் கொண்டுவந்து ஆட்சிசெய்யும் மனித இனத்தையே குற்றவாளிக் கூண்டில் நிறுத்துகின்றார்கள் அறிவியல் ஆராச்சியாளர்கள். அண்மைக்காலத்தில் இதற்கு மிகச்சிறந்த உதாரணம் அமேசான் காட்டுத்தீ!

கடந்த 2019ஆம் ஆண்டு அமேசான் காடுகள் பற்றியெரிந்தபோது இந்த பேரழிவுக்கு காரணம் மனிதர்களும் அவர்களது பேராசைகளுமே என சமூக ஆர்வலர்கள் போராட்டங்களை நடத்தியமை நினைவிருக்கலாம். அதிலும் சர்வ வல்லமை பொருந்திய அதிகார வர்க்கத்தை சேர்ந்த மனிதர்களே அமேசான் காட்டுத்தீக்கு காரணம் என்கிற குற்றச்சாட்டில் உண்மையில்லாமலில்லை. சுமார் ஐம்பத்தைந்து இலட்ச வருடங்களுக்கு முன்பு இயற்கை இந்த உலகிற்கு கொடுத்த கொடை அமேசான் மழைக்காடுகள் என ஆராச்சியாளர்கள் கூறுகின்றனர். முப்பது இலட்சங்களுக்கும் மேற்பட்ட அரியவகை உயிரினங்களும், இருபத்தைந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட பூச்சிச்சியினங்கள், நாற்பதாயிரத்திற்கும் மேற்பட்ட தாவர இனங்கள், இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட பறவையினங்கள் மற்றும் பாலூட்டிகள் உள்ளிட்டவைகளின் இருப்பிடமாக அமேசான் காடுகள் திகழ்கின்றது.

அதுமட்டுமன்றி மனிதர்கள் இதுவரை பார்த்திராத பல ஜீவராசிகளையும் தன்னகத்தே ஒழித்து வைத்திருக்கிறது அமேசான் எனும் கொடை. உலகின் மிக நீண்ட நதியான நைலுக்கு அடுத்தபடியான நீண்ட நதியான அமேசான் நதி ஓடுவதும் இந்த காட்டில்தான். இத்தனை ஆச்சரியங்களையும் பெருமைகளையும் தன்னகத்தே கொண்டிருக்கும் அமேசான் காடு ஒரு தேசம் மட்டுமே சொந்தம் கொண்டாட இயற்கை வழங்கியதல்ல என்கிறார்கள் இயற்கை ஆர்வலர்கள். சுமார் பத்து இலட்சத்திற்கும் அதிகமான பழங்குடிகள் வாழும் அமேசான், உலகின் நுரையீரல் என அழைக்கப்படும் அமேசான் இந்த உலகின் 20% ஒக்சிஜன் தேவையினை பூர்த்திசெய்கின்றது.



இந்த பூமியில் மனிதர்களால் வெளியேற்றப்படும் கார்பன்-டை-ஆக்ஸைட் ($CO^2$) வாயுவில் 5 சதவிகிதத்தை இந்த காடுகள் ஒளிச்சேர்க்கை (photosynthesis) சுழற்சிக்காக தன்னகத்தே இழுத்துக்கொண்டு ஆக்ஸிஜன் வாயுவை வெளியேற்றுகிறது. இதனால்தான் இந்தக் காடுகள், பூமியின் நுரையீரலாக மற்றும் காற்று குளிரூட்டிகளாகவும் (Air Conditioner) செயல்படுகின்றன. அதுமட்டுமன்றி உலக வெப்பமயமாக்குதலையும் (Global Warming) கட்டுப்படுத்த பெரிதும் உதவுகிறது.ஐம்பத்தைந்து இலட்சம் சதுரக்கிலோமீற்றர் நிலப்பரப்பு கொண்ட இந்த மாபெரும் மழைக்காட்டின் 60% நிலப்பரப்பினை தனது நிலப்பரப்பினுள் கொண்டிருக்கிறது பிரேசில் .

உலக உயிர்களுக்கு நன்மையினை மட்டுமே வாரிவழங்கிய அமேசான் காடுகளுக்கு அழிவை மட்டுமே கொடுத்துக்கொண்டிருக்கின்றோம் மனிதர்களாகிய நாம். அப்படி மனிதர்களால் நேர்ந்த அழிவுகளில் ஒன்றுதான் 2019ஆம் ஆண்டு ஏற்பட்ட தீ! உண்மையில் அதிகப்படியான வெப்ப காலங்களில் இயற்கையாகவே காடுகள் தீப்பற்றிக்கொள்வதுண்டு. (எவ்வாறு புயல், வெள்ளம், பூகம்பம் என இயற்கை சீற்றம் ஏற்படுகிறதோ, அதேபோல் காட்டுத்தீயும் இயற்கையின் ஒரு அங்கம்தான். கோடை காலங்களில் வெப்பம் அதிகமாக இருக்கும்போது மரங்கள் ஒன்றோடொன்று மோதும்போதும், இடி-மின்னல்களாலும் காட்டுத்தீ ஏற்படுகிறது. ஆய்வுகளின்படி, 94 சதவிகித காட்டுத் தீயானது, மனிதர்களின் கேடுகளால் மட்டுமே உருவாகிறது)

ஆனால் இந்த தீ இயற்கையால் நேர்ந்ததல்ல. அதன் பிண்ணனி மிகவும் அதிர்ச்சிகரமானது என்றால் மிகையில்லை! 2018 ஆம் ஆண்டு பிரேசிலில் ஏற்பட்ட ஆட்சி மாற்றமும், அந்த அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையும் இதன் பின்னணியில் உள்ளதாக இயற்கை ஆர்வலர்கள் சுட்டிக்காட்டினர். காடுகள் அழிக்கப்பட்டு விவசாய நிலங்களாகவும் பண்ணை நிலங்களாகவும் மாற்றப்பட்டதுடன், பல ஆண்டுகள் பழமையான மரங்கள் வெட்டப்பட்டு வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. அமேசானின் அரிய வளங்களை தெரிந்துகொண்ட பல பெரும் நிறுவனங்கள் அதனை சுரண்டத் தொடங்கினர். குறிப்பாக அமேசான் காட்டில் தங்கச் சுரங்கம் அமைக்க பல நிறுவனங்கள் போட்டிபோட, அமேசானின் எண்ணெய் வளங்களை சுரண்ட எண்ணெய் நிறுவனங்கள் வரிசைகட்டினர். இதனால் பழங்குடி மக்களின் இருப்பு இப்பெரும் நிறுவனங்களால் கேள்விக்குறியாயின!

சமீப காலமாகவே உலகம் வரலாறு காணாத இயற்கை பேரழிவுகளை சந்தித்து வருகின்றது. அதற்கு காரணம் மனிதனின் கண்மூடித்தனமான இயற்கை அழிப்பே. இயற்கையை நாம் அழித்தால் இறுதியில் அந்த அழிவுகளின் பாரிய விளைவுகளை சந்திக்கப்போவது மனித இனமே. இயற்கை நம்மை மட்டுமில்லாது, நம் சந்ததினரையும் நிச்சயம் அழிக்கும். இயற்கையோடு இசைந்து வாழப் பழகுவோம்.

இயற்கையைக் காத்து, நம் சந்ததினரையும் காப்போம்! உலகின் இயற்க்கை வளங்கள் அனைத்தும் இங்கு வாழும் அனைத்து உயிரினங்களுக்கும் பொதுவானது என்பதனை மனிதன் உணர்ந்து செயற்படப்போவது எப்போது ?




# இயற்கை எனும் பூமிப்பந்தின் இதயம்

புஸ்பராசா கோபிகா



**'மானிடராய்** பிறப்பதற்கு மாதவம் செய்திருக்க வேண்டும்.' என்று பெரியோர் கூறி அறிந்திருப்போம். மானிடர்களின் நிலைத்திருப்பை நிர்மாணிப்பது இயற்கை அன்றி வேறேதுமில்லை. இவ் உலகின் நிலைத்திருப்பிற்கு இறைவன் பஞ்சபூதம் ( நிலம், நீர், தீ, காற்று,ஆகாயம்) என்ற கொடையை வழங்கியுள்ளார். உண்மையிலே இந்த இயற்கையின் கொடைகளாலே உலகம் நிலைத்திருக்கிறது. உயிர்களை காக்கும் இயற்கையை காக்க யாரும் முன்வருவதில்லை. அதற்காகவே இயற்கை வளங்களை பாதுகாப்பதற்கெனவே பன்னாட்டு பாதுகாப்பு சங்கம் 1980ம் ஆண்டில் ஜீலை 28 அன்று உலக பாதுகாப்பு தினமாக அறிமுகப்படுத்தியிருந்தது.ஆனாலும் கூட இற்றை வரை நாம் அறிந்தும்,அறியாமலும் இயற்கையை அழித்த வண்ணமே உள்ளோம்.இயற்கையின் அழிவு தான் எம் அழிவை தீர்மானிக்கும் என்பதை உணர இன்னும் அதிக காலம் தேவைப்படாது. எனவே இவ்விடத்தில் இயற்கையின் மகத்துவத்தையும், அது அழிந்து போவதால் நாம் எதிர்கொள்ளும் இன்னல்களையும் பார்ப்போம்.

அறிவியலின் வளர்ச்சியை எண்ணி பெருமிதம் கொள்ளும் காலத்தில் வாழ்ந்துவரும் நாம் அறிவியலின் வளர்ச்சியால் பல எதிர்வினைகளையும் எதிர்கொள்ளத்தானே செய்கிறோம்.அதில் குறிப்பிட்டுக்கூறக்கூடிய ஒரு விடயமே அழிந்துவரும் இயற்கை. ஆம், அறிவியல் வளர,வளர இயற்கை அழிந்துகொண்டே போகிறது.அதாவது தொழில்னுட்ப வளர்ச்சியின் போக்கால் நகரங்களும், சாலைகளும் விரிவாக்கமடைந்து பெரிய கட்டடங்களும், தொழிற்சாலைகளும் உருவாகிவிட்டன. இவற்றின் உருவாக்கத்திற்காக எத்தனை வருட காலமாக பயன்தந்து வந்த பெருமரங்கள் துண்டாடப்பட்டிருக்கும்.எத்தனை பரப்பு நிலங்கள் அகழப்பட்டிருக்கும்.

எல்லாவற்றிலும் இலாபம் தேவை என்ற அவாவில் நாம் உண்ணும் உணவில் கூட நச்சுப்பதார்த்தங்களை கலக்க ஆரம்பித்துவிட்டோம். உண்மைதானே, அதிக விளைச்சல் பெறும் மோகத்தில், இயற்கைப்பசளைகளை ஒதுக்கிவிட்டு, அசேதனப்பசளைகளை பயன்படுத்தியதோடு நின்றுவிடாது, இரசாயன கிருமிநாசினிகளை பயிர்களுக்கு தெளிக்க தொடங்கிவிட்டோம். அத்துடன் மண்வளமும் மக்கிப்போகத்தொடங்கியது. இவற்றால் மண்வளம் மட்டுமன்றி, நீரின் தன்மையுமே மாற்றமடைகிறது. அதாவது புகையிலை போன்ற ஒருசில பயிர்வகைகளுக்கு அதிகளவிலான அசேதனப்பசளைகளும்,கிருமிநாசினிகளையும் பயன்படுத்துவதால், அவை நிலத்தடி நீருடன் கலந்து நீரின் தன்மையை மாசுபடுத்துவதாக ஆய்வுகள் குறிப்பிடுகிறது.

மிலேனிய யுகத்தில் வாழ்பவர்கள் நிச்சயமாக பிளாஸ்திக்,பொலித்தீன் பொருட்களைத்தான் பாவிக்கவேண்டுமேன்ற ஏதும் விதிமுறைகள் உள்ளதோ தெரியவில்லை.அவற்றின் பாவனை இமயத்தை தொட்டுவிட்டது. அவற்றின் பாவனையால் சூழலுக்கு மாத்திரம் தீங்கல்ல, பல உடலியல் ரீதியான நோய்களும் ஏற்படவே செய்கின்றன. இவை யாவும் தெரிந்தும்கூட அதை கைவிட யாருக்கும் மனமில்லை. இந்த பிளாஸ்ரிக்,பொலித்தீன் பொருட்களை எரிப்பதன் மூலம் வளி மாசடைகிறது.அதன்பின் நாம் யாரிடம் பிராணவாயுவிற்கு யாரிடம் யாசகம் கேட்பது? உக்கிப்போகாத அவற்றை நிலங்களில் புதைப்பதால், மண்வளம் முற்றாக அழிவடைகிறது.அதுதவிர, இந்த கழிவுப்பொருட்களை கண்ட கண்ட இடங்களில் வீசுவதால், எத்தனையோ பிராணிகள் அதை உண்டுவிட்டு, சமிபாடடையாது மரணித்துவிடுகின்றன. அறிவியல் வளர்ச்சி இயற்கையைத்தான் அழிக்கின்றது எனப் பார்த்தால்,தற்போது உயிர்களையும் கொல்லுமளவிற்கு வளர்ந்துவிட்டது. இயற்கையில் இருந்து எத்தனையோ பல நன்மைகளை பெற்றுக்கொண்ட பின்னும் அதற்கு துரோகம் செய்வது போல் அதை நாம் அழித்துக்கொண்டிருக்க,மறுபுறம் இயற்கை தனது சீற்றத்தாலும் தான் அழிந்தவண்ணமே உள்ளது. இதற்கு எடுத்துக்காட்டாக,சுனாமி, சூறாவளி,நிலநடுக்கம்,எரிமலை வெடிப்பு போன்றவற்றை கூறலாம்.

மேற்கூறப்பட்ட ரீதியில் ஒருபுறம் இயற்கை அழிவுகளை சந்தித்துக் கொண்டு வருவதால்,நாம் எத்தகைய இன்னல்களை எதிர்நோக்கிக்கொண்டும்,இனி எதிர்நோக்கவும் போகின்றோம் என நோக்கின்,மரங்களை வெட்டி,காடுகளை அழிப்பதால்,வெப்பநிலை அதிகரித்து, மழைவீழ்ச்சி குன்றத்தொடங்கிவிடும். பருவகாலங்களில் போதிய மழைவீழ்ச்சி கிடைக்கப்பெறாதுவிடின், விவசாய நடவடிக்கைகளுக்கு போதிய நீர் கிடைக்காதல்லவா? அதன்பின் அறுவடை குன்றி,நாம் உணவிற்கு தள்ளாட வேண்டும்.முழு நாடுமே பொருளாதார ரீதியில் பின்னடைவை எதிர்நோக்கும்.

கைத்தொழில் மயமாக்கல் காரணமாக சட்டவிரோதமான முறையில், மண் அகழ்தல் இடம்பெறுவது அனைவரும் அறிந்ததொரு விடயமே.அதுபோலவே நச்சு வாயுக்கள் வளியில் கலந்து மாசடைவு ஏற்படுவதால், சுவாச ரீதியான நோய்களும் ஏற்படும். இவ்வாறாக ஒன்றன்பின் ஒன்றாக நாம் எத்தனை இடர்களை எதிர்கொள்ளப்போகின்றோம் என்று, கூறிக்கொண்டே போகலாம்.

நன்மையோ,தீமையோ எதை மாற்றுவதற்கும் ஒரு வழி நிச்சயம் இருக்கும்.அந்த மாற்றுவழியை நாம் இனங்கண்டு அதன்படி ஏன் நடக்கக்கூடாது? 'சிறு துளி பெருவெள்ளம்.' என்பதற்கிணங்க ஒவ்வொருவரிடையேயும் ஏற்படும் சிறு சிறு மாற்றங்கள் அனைத்தையுமே மாற்றுமளவிற்கு வல்லமை படைத்தது. அதாவது நாகரிகம் என்ற போர்வையை போர்த்திக்கொண்டு ஒருத்தரைப் பார்த்து, அதேபோல் நாமும் நடக்கவேண்டும். என்று நினைக்கின்ற மாறுபட்ட வாழ்க்கை நிலைக்குத்தான் நாம் பழக்கப்பட்டுவிட்டோம்.அதுபோல, எம்மில் ஏற்படும் சில நல்ல பழக்கங்களை மற்றவர்களும் பின்பற்ற வாய்ப்புண்டல்லவா?

மரங்களை வெட்டுவதை தவிர்ப்போம். எம்மால் இயன்றவரை மரக்கன்றுகளை நடுவோம். தாவரங்களை வளர்ப்பதில் கிடைக்கும் மனநிம்மதியும்,ஆனந்தமும் வேறெதிலும் கிடைத்துவிடாது.ஒவ்வொருத்தரும் தங்களது வீட்டை மரக்கன்றுகளால் நிரப்பிக்கொள்ளவேண்டும். தாவரங்கள் மூலம் கிடைக்கும் குளிர்ச்சியும், பயன்களும்,அழகும் நிச்சயம் மற்றவர்களையும் அதைச்செய்யச்சொல்லி தூண்டும்.

இரசாயன கிருமிநாசினிகளை பயிர்களுக்கு பயன்படுத்துவதை முற்றாக தவிர்ப்போம். இயற்கை முறையில் கிருமிநாசினிகள் தயாரிக்க எத்தனையோ முறைகள் உள்ளன. அதன் மூலம் நாமே எமக்கு தேவையான பசளைகளையும்,கிருமிநாசினிகளையும் தயாரிக்கலாம்.அதற்கு கூட அடிப்படையான மூலப்பொருட்களை தாவரங்களிலிருந்தே பெற்றுக்கொள்ள வேண்டும்.

பொலித்தீன்,பிளாஸ்திக் பாவனையையும் இயன்றவரை குறைப்போம். ஆரம்பகாலங்களில் இதன் பாவனைகள் அற்ற காலத்திலும் மக்கள் வாழ்ந்தார்கள் தானே.அன்று அவர்கள் எவ்வளவு ஆரோக்கியமாக வாழ்ந்தார்கள்.ஆனால் இன்று அப்படியா? பிறக்கும் குழந்தையே தீரா நோயுடன் பிறக்கும் நிலை ஏற்பட்டுவிட்டது. இதற்கெல்லாம் காரணம் வேறேதுமில்லை. நாகரிகமென்ற பெயரில் எம்மில் ஏற்பட்ட மாற்றங்கள் தான்.

இயற்கை எமது வாழ்வியலுக்கு எந்தளவிற்கு முக்கியமென்று மேற்கூறப்பட்ட விடயங்கள் மூலம் தெளிவாகின்றது. எமது சமூகத்திற்கு நாம் முன்னோடியாக இருப்பது பெருமிதம் கொள்ளக்கூடிய ஒரு விடயம். எனவே சமூகத்தை திருத்தவோ,மாற்றவோ எம்மில் மாற்றங்களை கொண்டுவருவோம். எம்மைப்பார்த்து ஒட்டுமொத்த சமூகமும் இயற்கையை நேசிக்கத்தொடங்கட்டும்!

**'இயற்கையை நேசித்து,
அதைப்பேணினால்,எதிர்பார்த்த
வாழ்வு வாழலாம்;
இயற்கையை அழித்தால், எதிர்பாராத
தருணத்தில் எம் அழிவு நிகழும்'**

**மரங்களை வெட்டுவதை தவிர்ப்போம். எம்மால் இயன்றவரை மரக்கன்றுகளை நடுவோம். தாவரங்களை வளர்ப்பதில் கிடைக்கும் மனநிம்மதியும், ஆனந்தமும் வேறெதிலும் கிடைத்துவிடாது. ஒவ்வொருவரும் தங்களது வீட்டை மரக்கன்றுகளால் நிரப்பிக்கொள்ளவேண்டும். தாவரங்கள் மூலம் கிடைக்கும் குளிர்ச்சியும், பயன்களும், அழகும் நிச்சயம் மற்றவர்களையும் அதைச்செய்யச்சொல்லி தூண்டும்.**





# கறுப்பு சந்தையும் கறுப்பு ஆடுகளும்!



பி.மாணிக்கவாசகம்

பொருளாதார நெருக்கடிகள் மக்களைப் பல்வேறு வடிவங்ககளில் நெருக்கி ஒடுக்கி தலைநிமிர முடியாத நிலைமைக்கு ஆளாக்கி இருக்கின்றன. அதனால் எழுந்துள்ள சவால்களை மக்கள் பல்வேறு வழிகளில் எதிர்கொள்வதற்கு முற்பட்டிருக்கின்றார்கள். அந்த வகையில் நெருக்குதல்களையும் மீறி மேலெழுந்து தமது நாளாந்த வாழ்வியலைக் கொண்டு நடத்துவதற்கு அவர்கள் அபார முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றார்கள். இது, அரசு ஒரு வழி. குடிமக்கள் வேறொரு வழி என்ற நிலைமையை எடுத்துக் காட்டுவதாகவே அமைந்திருக்கின்றது.

> “நீண்ட நேரம் வரிசைகளில் காத்திருக்கும்போது பசி, தாகம் என்பன முறையாகத் தீர்க்கப்படாமையினாலும், எரிபொருள் கிடைக்குமா கிடைக்காதா என்ற கவலை கலந்த ஆவலுணர்வினால் ஏற்படுகின்ற பதட்டத்தினால் மனப்பதகளிப்புக்கு உள்ளாகுபவர்களின் உடல் நலம் பாதிக்கப்படுகின்றது. இத்தகைய பாதிப்புகளினால் 20 வரையிலான எரிபொருள் வரிசை மரணங்கள் சம்பவத்திருக்கின்றன. இத்தகைய மரணங்கள் மேலும் அதிகரிப்பதற்கான சூழலே எரிபொருளுக்காக காத்திருப்பு வரிசைகளில் நிலவுகின்றது. மனிதாபிமானமற்ற வரிசைச் சூழலில் இடம்பெற்ற மரணங்கள் தொடர்பில் அரசு கவனம் செலுத்தத் தவறியிருக்கின்றது. இந்த மரணங்கள் அநியாயமானவை”



உணவு, எரிபொருள், மருத்துவம், போக்குவரத்து, கல்வி, வாழ்வாதாரம் என அன்றாட வாழ்க்கைக்கு அவசியமான பல்வேறு தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கு அவர்கள் படாத பாடுபட நேர்ந்திருக்கின்றது. பற்றாக்குறையுடன் பொருட்களின் விலை அதிகரிப்பும் அவர்களை நெருக்கிக் கொண்டிருக்கின்றது.

பொருட்களின் விலைகள் எல்லாமே மூன்று நான்கு மடங்குகளாக அதிகரித்திருக்கின்றன. இந்த விலை அதிகரிப்பு ஒரு புறமிருக்க, பற்றாக் குறையினால் கறுப்புச் சந்தையின் செல்வாக்கும் அவர்களை அலைக்கழித்துக் கொண்டிருக்கின்றது. கறுப்புச் சந்தையில் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் வெளிச் சந்தை விலைகளிலும் பார்க்க ஐந்து ஆறு மடங்கு அதிகரித்திருக்கின்றன. மிக மிக அவசர தேவை மற்றும் அவசர நிலை காரணமாக, வேறு மார்க்கம் எதுவும் அற்ற நிலையில், கறுப்புச் சந்தையில் கொள்ளை இலாப விலைக்கு விற்கப்படுகின்ற பொருட்களைக் கொள்வனவு செய்தவதற்குப் பலரும் நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றார்கள்.

அரசாங்கம் எரிபொருள் விலையை அதிகரித்தபோது, மக்கள் அதனை, அநியாயம் எனக் கூறி கண்டித்தார்கள். அதிகரிக்கப்பட்ட விலைக்கு எரிபொருட்களை வாங்கி வாழ்க்கை நடத்த முடியவில்லையே, அவ்வாறு அதிக விலைக்குக் கொள்வனவு செய்ய முடியாதிருக்கின்றதே என்று பலரும் அங்கலாய்த்தார்கள். அத்துடன் எரிபொருள் விலையேற்றம் காரணமாக போக்குவரத்துக் கட்டணங்களும் அதிகரித்துவிட்டனவே என கவலைப்பட்டார்கள். கண்டனம் தெரிவித்தார்கள். ஆனால் ஆச்சரியப்படத்தக்க வகையில் எரிபொருளுக்கு ஏற்பட்டுள்ள பெரும் தட்டுப்பாட்டு நிலையில் கறுப்புச் சந்தையில் ஒரு லீற்றர் பெட்ரோலை 3 ஆயிரம் ரூபாவுக்கும், டீசல் ஒரு லீற்றரை 2 ஆயிரம் ரூபாவுக்கும் கொள்வனவு செய்து தமது அவசர போக்குவரத்து மற்றும் தேவைகளை வசதியுள்ளவர்கள் பூர்த்தி செய்து கொள்கின்றார்கள்.

கறுப்புச் சந்தை வியாபாரம் இதனால் நாட்டின் பலபகுதிகளிலும் கொடிகட்டிப் பறக்கின்றது. எரிபொருளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே எரிபொருள் நிலையங்களில் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. ஆனாலும் கறுப்புச் சந்தையில் தட்டுப்பாடில்லாமல் பெட்ரோல் டீசல் என்பன விற்பனை செய்யப்படுகின்றன. இது எப்படி சாத்தியம் என்பது, கறுப்புச் சந்தைக் காரர்களுக்கு மட்டுமே தெரிந்த இரகசியமாகும்.

எரிபொருளைத் தாராளமாக இறக்குமதி செய்து மக்களுக்கு விநியோகிக்க முடியாதுள்ளதாக அரசாங்கம் கூறுகின்றது. நாளாந்த தேவையிலும் பார்க்க குறைந்த அளவிலான எரிபொருளையே விநியோகம் செய்ய வேண்டிய கட்டாய நிலைமை ஏற்பட்டிருப்பதாக எரிபொருள் அமைச்சர் கூறுகின்றார். குறைந்த அளவிலான எரிபொருளை அத்தியாவசிய தேவைகளையும் பொதுமக்களின் தேவைகளையும் பூர்த்தி செய்யும் வகையில் கியு ஆர் நடைமுறையின் கீழ் வாகனங்களின் பதிவு இலக்கத்தின் கடைசி இலக்கத்தை அடிப்படையாகக் கொண்டு எரிபொருள் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

## மரணப்பொறி

எரிபொருளுக்கான தட்டுப்பாடு காரணமாக எரிபொருள் விற்பனை நிலையங்களில் நீண்ட வரிசைகளில் மக்கள் காணப்படுகின்றார்கள். மணித்தியாலக் கணக்கில் காத்திருந்த நிலைமை மாற்றமடைந்து எட்டு நாட்கள் பத்து நாட்கள் என நாட்கணக்கில் வரிசைகளில் காத்திருந்து இழுபறிபட்டு எரிபொருளைக் கொள்வனவு செய்ய வேண்டி உள்ளதாக மக்கள் கூறுகின்றனர். சில வேளைகளில் அங்கு இடம்பெறுகின்ற ஒழுங்கீன நடவடிக்கைகளினால் சிலர் பொறுமை இழந்து, சீற்றம் கொள்வதையடுத்து, காவல் துறையினரின் தள்ளுமுள்ளு, தாக்குதல்களுக்கும் கைதுகளுக்கும் சிலர் ஆளாக நேரிடுகின்றது.



நீண்ட நேரம் வரிசைகளில் காத்திருக்கும்போது பசி, தாகம் என்பன முறையாகத் தீர்க்கப் படாமையினாலும், எரிபொருள் கிடைக்குமா கிடைக்காதா என்ற கவலை கலந்த ஆவலுணர்வினால் ஏற்படுகின்ற பதட்டத்தினால்

10 ஆம் பக்கம் பார்க்க...




# கறுப்பு சந்தையும் கறுப்பு ஆடுகளும்!

மனப்பதகளிப்புக்கு உள்ளாகுபவர்களின் உடல் நலம் பாதிக்கப்படுகின்றது. இத்தகைய பாதிப்புகளினால் 20 வரையிலான 'எரிபொருள் வரிசை மரணங்கள்' சம்பவத்திருக்கின்றன. இத்தகைய மரணங்கள் மேலும் அதிகரிப்பதற்கான சூழலே எரிபொருளுக்காக காத்திருப்பு வரிசைகளில் நிலவுகின்றது. 'மனிதாபிமானமற்ற வரிசைச் சூழலில் இடம்பெற்ற மரணங்கள்' தொடர்பில் அரசு கவனம் செலுத்தத் தவறியிருக்கின்றது. இந்த மரணங்கள் அநியாயமானவை. துவிர்க்கப்பட்டிருக்க வேண்டியவை.

மரணப்பொறியாக மாறியுள்ள எரிபொருள் வரிசை நிலைமைக்கும், இந்த மரணங்களுக்கும், மரணங்கள் சம்பவிப்பதற்கான சூழலை அனுமதித்திருப்பதற்கும் அரசு பொறுப்பேற்க வேண்டும். பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு மனிதாபிமான ரீதியில் அரசாங்கம் இழப்பீடு வழங்க வேண்டும். அதேவேளை, எரிபொருள் வரிசைகளில்; புதிதாக உருவாகியுள்ள இந்த மனிதாபிமான நெருக்கடி குறித்து மனித உரிமைகள் அமைப்பு கவனம் செலுத்த வேண்டும். நிலைமைகளை அடிப்படை மனித உரிமை நிலைமைகளில் ஆய்வு செய்து அங்கு நிகழ்கின்ற மனித உரிமை மீறல்களைத் தடுத்து நிறுத்தும் வகையில் அரசுக்கும் நீதித்துறைக்கும் உரிய பரிந்துரைகளைச் செய்ய வேண்டும்.

வீட்டைவிட்டு, எரிபொருள் வரிசையில் இவ்வாறு நாட்கணக்கில் காத்திருப்பதனால் 6 ஆயிரம் 7 ஆயிரம் ரூபா உணவு மற்றும் தேவைகளுக்காகச் செலவு செய்து மோட்டார்; சைக்கிள்களுக்கு ஆயிரத்து 500 ரூபாவுக்கும் முச்சக்கர வண்டிகளுக்கு 2 ஆயிரம் ரூபாவுக்கும் மட்டுமே பெற்றோலைப் பெற முடிகின்றது. கார்கள் மற்றும் வாகனங்களுக்கும் மிகக் குறைந்த அளவிலேயே எரிபொருளைப் பெற்றுக்கொள்ள முடிகின்றது. வாகனங்களுக்கான எரிபொருள் அளவில் மாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகள் குறித்த அறிவிப்பும் வெளியாகியிருக்கின்றது.

## கலப்பட எரிபொருளும் கறுப்புச் சந்தையும்

அரசாங்கம் மக்களுக்குத் தேவையான எரிபொருளை ஒழுங்கு முறையில் விநியோகம் செய்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள போதிலும் எரிபொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கான வரிசைகள் குறையவில்லை. வரிசைகளின் நீளம் கூடிச் செல்கின்றதே தவிர குறைவடைவதைக் காண முடியவில்லை. அதேவேளை, விவசாயிகள், கடற்தொழிலாறர்கள், முச்சக்கர வண்டி உரிமையாளர்கள், தனியார் வாகன உரிமையாளர்கள், அரச போக்குவரத்துச் சேவையினர், தனியார் பேரூந்து உரிமையாளர்கள் என தொழில்முறை சார்ந்தோரின் தொழில் முயற்சிகளுக்கு அவசியமான எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்குக்கூட அரசின் வினியோக வேலைத்திட்ட முறைமைகள் உதவவில்லை என்பதுதான் கவலைக்குரியது.

எரிபொருள் பற்றாக்குறை காரணமாக பொதுப் போக்குவரத்துச் சேவை முடக்கத்திற்கு உள்ளாகியிருக்கின்றது. இதனால் அரச ஊழியர்கள் பணிக்குச் செல்ல முடியாத நிலை காரணமாக அவர்களது வேலை நாட்களை அரசாங்கமே குறைத்திருக்கின்றது. பாடசாலைகளை வாரத்தில் மூன்று நாட்களாகக் கல்வி அமைச்சு குறுக்கியுள்ளது.

நெருக்கடி நிலைமைகள் மற்றும் நாட்டின் ஆட்சிச் செயற்பாடுகள் குறித்து விவாதித்துத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு 'மக்கள் பிரதிநிதிகள்' நாடாளுமன்றத்திற்குச் சமூகமளிப்பதற்கு எரிபொருள் இன்மை பெரும் தடையாக இருப்பதாகக் கூறப்படுகின்றது.

இத்தகைய பின்னணியில்தான் தமது போக்குவரத்துத் தேவைகளுக்காக மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கிடைக்கின்ற பெட்ரோல் மற்றும் டீசல் ஆகியவற்றுடன் தின்னர் மற்றும் டேர்பன்டைன் போன்றவற்றைக் கலந்து வாகனங்களுக்கு எரிபொருளாகப் பயன்படுத்துகின்றார்கள். இவற்றைப் பயன்படுத்துவதன் மூலம் தமக்குக் கிடைக்கின்ற எரிபொருளின் அளவைக் கூட்டிக்கொள்ளவும் குறைந்த எரிபொருளில் கூடிய தொலைவுக்கு வாகனங்களைச் செலுத்திச் செல்லவும் முடிகின்றது எனக் கூறப்படுகின்றது. இத்தகைய கலப்படம் செய்யப்பட்ட பெட்ரோல் லீற்றர் 3 ஆயிரம் ரூபாவுக்கும், டீசல் லீற்றர் 1500 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுவதாகக் கறுப்புச் சந்தையில் இருந்து தகவல்கள் கசிந்திருக்கின்றன.

இத்தகைய எரிபொருள் கலப்படத்துக்கு அவசியமான தின்னர் மற்றும் டேர்பன்டைன் ஆகியவற்றின் விலைகளும் பல மடங்காக சந்தையில் அதிகரித்திருப்பதாகவும் அதன் காரணாகவே கலப்பட எரிபொருளும் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதாகவும் கூறப்படுகின்றது.



> பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கின்ற மக்களின் செயற்பாடுகளை சட்ட ரீதியான நோக்கில் மட்டுமே கவனத்திற் கொள்ளாமல் மனிதாபிமான ரீதியிலும் விட்டுக்கொடுக்கும் தன்மையிலும் கவனத்திற் கொண்டு செயற்பட வேண்டியதே இப்போதைய அவசரத் தேவையாக உள்ளது.

வாகன பொதுப் பயன்பாட்டுக்கென வரையறுக்கப்பட்டுள்ள எரிபொருளில் இவ்வாறு கலப்படம் செய்து பயன்படுத்துவதனால் வாகனங்களில் இருந்து வெளியேற்றப்படுகின்ற புகையினால் சுற்றுச்சூழல் மாசடைவதாகக் கூறப்படுகின்றது. அங்கீகரிக்கப்பட்ட எரிபொருட்களில் கலப்படம் அல்லது மாற்றம் செய்வது தண்டனைக்குரிய குற்றமாகும். ஆனால் அத்தகைய குற்றச்செயல்கள் இடம்பெறுவதற்கு மறைமுகமாக அங்கீகாரம் வழங்கப்பட்டது போன்றதொரு நிலைமையை எரிபொருள் பற்றாக்குறை உருவாக்கியிருக்கின்றது.

## விட்டுக்கொடுப்பும் நம்பிக்கை உருவாக்கமும் அவசியம்

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபாய ராஜபக்ஷ டொலர்களை மிச்சம் பிடிப்பதற்காக விவசாயத்துறைக்கு மிகவும் அவசியமான இரசாயன உள்ளீடுகளின் இறக்குமதியைத் திடீரென தடை செய்தார். இதனால் நாட்டின் விவசாய முயற்சிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டன. தேயிலை இறப்பர் ஆகிய அந்நியச் செலாவணியை ஈட்டித் தந்த உற்பத்தித்துறையும் பாதிக்கப்பட்டது. இதனால் நெல் மற்றும் காய்கறி உற்பத்தியில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டது. தேயிலை இறப்பர் ஏற்றுமதி மூலம் கிடைத்திருந்த அந்நியச்செலாவணியும் குறைவடைந்தது. நெல் உற்பத்தியில் ஏற்பட்ட 50 வீத வீழ்ச்சி காரணமாக அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கின்றது. வருட இறுதியில் மக்கள் பட்டினி நிலைமையை எதிர்கொள்ள நேரிடும் என ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள ரணில் விக்கிரமசிங்க பிரமராகப் பதவி வகித்த போது எச்சரிக்கை செய்திருந்தார்.

சிறுபோக நெற்செய்கையின் அறுவடைக் காலம் நெருங்கியிருக்கின்ற தருணத்தில் விவசாயிகளுக்குத் தேவையான எரிபொருள் கிடைக்காத காரணத்தினால் நெல் அறுவடை பாதிப்படைகின்ற ஆபத்தான நிலைமை உருவாகியிருக்கின்றது. அத்தியாவசிய தேவைகளுக்கான எரிபொருள் முன்னுரிமை அடிப்படையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதாகக் கூறுகின்ற அரசாங்கம் விவசாயிகளின் நெல் அறுவடைக்கு அவசியமான டீசலை உரிய தருணத்தில் முறையாக விநியோகம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கத் தவறியிருக்கின்றது. இது ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ள நாட்டின் உணவுப் பாதுகாப்பு நிலைமையை மேலும் மோசமாக்கவே உதவும் என்பதில் சந்தேகமில்லை.


பொருளாதார நெருக்கடி உருவாகுவதற்குக் காரணமாக இருந்த ஜனாதிபதி, பிரதமரும் அரசாங்கமும் பதவி விலக வேண்டும் என மக்கள் தன்னெழுச்சி கொண்டு கிளர்ந்தெழுந்து நடத்திய போராட்டம், பிரதமர், நிதியமைச்சர் மற்றும் ஜனாதிபதி ஆகியோரைப் பதவி இழக்கச் செய்திருக்கின்றது. இதனால் ஏற்பட்ட அசியல் குழப்பகரமான அரசியல் சூழலில் பிரதமர் பதவியைப் பொறுப்பேற்று பதில் ஜனாதிபதியாகி, பின்னர் நாட்டின் எட்டாவது ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார். பதில் ஜனாதிபதியாக அவர் நியமிக்கப்பட்டதற்கான முன்னாள் ஜனாதிபதி கோத்தாபாய ராஜபக்ஷவின் கடிதம் கிடைத்தவுடன், முறைப்படி சத்தியப் பிரமாணம் செய்யாமலேயே பதில் ஜனாதிபதி என்ற அதிகார வழிமுறையில் நாட்டில் அவசரகாலச் சட்டத்தைப் பிறப்பித்திருந்தார்.

அதேபோன்று அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தி, போராட்டக்காரர்களிடம் இருந்து நாடாளுமன்றத்தையும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் பாதுகாப்பதாகக் கூறி, நெருக்கடியான ஒரு சூழலிலேயே ஜனாதிபதி தெரிவுக்கான நாடாளுமன்றத் தேர்தல் தெரிவை நடத்துவதற்கான நிலைமையை உருவாக்கி இருந்தார். நாடாளுமன்றத்தினால் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டவுடன் அவசரகாலச் சட்ட விதிகளைக் கடுமையாகப் பிரகடனப்படுத்தி காலிமுகத்திடல் போராட்டக் களத்தின் மீது இராணுவப் படை நடவடிக்கையின் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது.

நாட்டின் அதியுயர் தலைமைப்பதவியாகிய ஜனாதிபதி பதவியை ஏற்றவுடன் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியுள்ள நாட்டு மக்களுக்கு நம்பிக்கை அளிக்கத் தக்க நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குப் பதிலாக அல்லது அது குறித்து மக்களின் கவனத்தை ஈர்க்கத்தக்க கொள்கைப் பிரகடனத்தைச் செய்யத் தவறியிருக்கின்றார். அத்துடன் நாடு பொருளாதார ரீதியில் படுகுழியில் வீழ்ச்சி அடையும் வகையில் தவறான கொள்கை வழிமுறைகளில் ஆட்சி செய்த அரசுக்கும் அரச தலைவர்களுக்கும் எதிராக ஜனநாயக உரிடி வழியில் போராடியவர்களினால் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்திருக்கின்றது என்ற செயற்தொனியில் கடுமையான விதிமுறைகளைக் கொண்ட அவசரகாலச் சட்டங்களைப் பிரகடனப்படுத்தி படையினருக்கும் பொலிசாருக்கும் அதிக அளவிலான அதிகாரத்தை வழங்கியுள்ளார்.

இந்தச் செயற்பாடு ஏற்கனவே பிரதமர் என்ற ரீதியில் பொருளாதார நெருக்கடிகளைத் தணிப்பதற்காக அவர் மேற்கொண்டிருந்த நடவடிக்கைகள் மீது நம்பிக்கை இழந்துள்ள மக்களை அரசிடம் இருந்து மேலும் அந்நியப்படச் செய்திருக்கின்றது. நாடு மோசமான நிலைமைகளில் சிக்கித் தவிக்கின்ற தருணத்தில் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் கவனத்தை ஈர்த்து, அவர்களின் நம்பிக்கையை வென்றெடுக்கத் தக்க நடவடிக்கைகளே முதன்மை பெற்றிருக்க வேண்டும். ஆனால் நிலைகுலைந்துள்ள அரசியல் நிலைமைகளை ஸ்திரப்படுத்தி சர்வதேச நாணய நிதியம், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் சர்வதேச நாடுகள் என்பவற்றின் எதிர்பார்ப்பை நிறைவேற்றி உதவிகளைப் பெறுவதற்குப் பதிலாக முரண்பாடான ஒரு நிலைமையை உருவாக்குவதற்கே ஜனாதிபதியின் நடவடிக்கைகள் அமைந்திருக்கின்றன.

பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கின்ற மக்களின் செயற்பாடுகளை சட்ட ரீதியான நோக்கில் மட்டுமே கவனத்திற் கொள்ளாமல் மனிதாபிமான ரீதியிலும் விட்டுக்கொடுக்கும் தன்மையிலும் கவனத்திற் கொண்டு செயற்பட வேண்டியதே இப்போதைய அவசரத் தேவையாக உள்ளது.



# நட்பு எனும் நல்லறம்

**நட்பானது** எந்த ஒரு எதிர்பார்ப்பும் இல்லாமல் கருத்துகளையும் உணர்வுகளையும் பகிர்ந்து கொள்ளும் உறவே நட்பு. உலகின் உன்னதமான உறவுகளில் இதுவும் ஒன்று. இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக திருக்குறளை சொல்ல ஆசைப் படுகிறேன்.

'உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் கலைவதாம் நட்பு'

நம் ஆடை விலகும் போது உடனடியாக கைகள் அதை மறைக்க முனையும். அதுபோல நமக்கு துன்பம் என்று தெரிந்தவுடனே அவ்விடத்தில் துணையாக நிற்பதே சிறந்த நட்பு.

எனக்கு நண்பர்கள் பெரிதாக இல்லை. ஆனால் இருக்கும் நண்பர்கள் அனைவரும் என் மனதிற்கு நெருக்கமானவர்கள். என் நலனில் என்னையும் விட அக்கறை கொண்டவரகள். நான் தவறு செய்தால் என்னை முதலில் கேள்வி கேட்பதும் அவர்களே.


நட்பில் சிறந்தது அந்த தன்னலமற்ற பண்பு தான். இன்று சொந்தகாரர்களிடம் உதவி கேட்க தயங்கும் மனது நண்பர்களிடத்தில் உரிமையாக கேட்கிறது. அதற்கு காரணம் அந்த உறவில் பணத்தின் பங்கு குறைவாக இருப்பதே.

நட்பில் பொய்யானது பயனை பொருத்து நட்பு பாராட்டுவது. அப்படி பட்ட நண்பர்களையும் நான் சந்தித்துள்ளேன். உங்களிடம் இருந்து கிடைக்கும் பலன்களுக்காகவே உங்களிடம் நட்பு பாராட்டுவர் இவர்கள். தேவைகள் தீர்ந்ததும் பறந்து விடுவர்.

நட்பில் தாழ்ந்தது நம்மிடம் இனிக்க இனிக்க பேசிவிட்டு நாம் இல்லாதபோது நம்மை பற்றி தவறாக பேசுவது. நம்மைப் பற்றிய பல முயற்சிகளை இவர்களே உருவாக்குவர். இவர்களிடம் கவனமாக இருக்க வேண்டும்.

ஆண் பெண் நட்பு என்ற ரீதியில் பார்க்கும் பொழுது இந்த சமூகம் வகுக்கும் சில விதிமுறைகளால் தான் இன்றய சூழலில் ஆண், பெண் நட்புக்கு களங்கம் ஏற்படுகிறது.

இந்த சமூகம் பல குணாதிசயங்களை கொண்டது. அதில் முக்கியமான ஒன்று ஒரு



ஆணும்,பெண்ணும் சேர்ந்து நட்பாக பழகினால் இருவருக்கும் காதல் உள்ளது என்று அர்த்தம் கொண்ட பார்வையில் பார்ப்பது.

ஒரு பெண்ணிடம் பழகினாலே நண்பர்கள் முதற் கொண்டு உறவினர்கள் வரை 'மச்சி உண்ட காதலன் தான அவங்க' என்று கேட்பதே இன்றும் நடைமுறையில் உள்ளது.

இதில் ஏன் சமூகத்தை உள்ளே கொண்டு வருகிறேன் என்றால் எனக்கு தெரிந்த நண்பர் ஒருவருக்கும், அவர் வீதிக்கு அருகில் உள்ள வீதிக்கும் உள்ள பெண் ஒருவருக்கும் பள்ளி கால நட்பானது பள்ளி முடிந்த பின்பும் நீடித்தது. இருவரும் பார்க்கும் இடங்களில் நட்பு பாராட்டப்படுவதுண்டு (நட்பு ரீதியில் மட்டுமே)..என் நண்பருக்கு திருமணம் நிச்சயமானது. பெண் வீட்டார் மாப்பிள்ளை நல்லவரா என்று ஊராரிடம் விசாரிப்பது வழக்கம் தானே..அவ்வாறு விசாரித்ததில் நட்பு ரீதியில் பழகிய பெண்ணை அவருடைய காதலி என்று சொல்லி திருமணத்தையே நிருத்தி விட்டனர் .சில சமூக விரோதிகள். பின் தன் பள்ளி தோழியையே இறுதியில் அவர் திருமணம் முடித்தார். இன்று இருவரும் நன்றாக வாழ்ந்தாலும். இந்த சமூகத்தில் ஒரு சிலரால் ஆண்,பெண் நட்பை தவறாக சித்தரிக்கப்படுவதால் அதன் விளைவு இது போல் ஆகிவிடுகிறது.



சோபிகா கிருஷ்ணமூர்த்தி

ஒரு ஆணும்,பெண்ணும் பழகினால் காதல் தான் என்று இந்த சமூகம் புறம் பேசுவதை நிறுத்துங்கள். அதுவே ஆண், பெண் நட்புக்கு ஒரு சிறந்த அங்கிகாரம். நட்பு ஓர் ஆண், பெண்,திருநங்கை என யாரிடம் வேண்டும் என்றாலும் கொள்ளலாம் அது ஒன்றும் தவறு இல்லை...... அது காதலாக மாறினாலும் ஒன்றும் பெரிய தவறு இல்லை. அது நட்பாக இருந்தாலும் காதலாக இருந்தாலும் அவர்களிடத்தில் நல்ல புரிதல் வேண்டும்.



தோழா தோழா,
கனவு தோழா,
தோழா தோழா,
தோள் கொடு கொஞ்சம் சாஞ்சிக்கணும்,




நட்பை பத்தி நாமும் பேசி தீர்த்திக்கணும்,

உன்ன நான் புரிஞ்சுக்கணும்,
ஒன்னொன்னா தெரிஞ்சுக்கணும்,
ஆணும் பெண்ணும் பழகிக்கிட்டா,
காதல் ஆகுமா?
அது ஆயுள் முழுதும் தொடர்ந்தாலும்,
நட்பு மாறுமா?
–
நட்புக்குள் பொய்கள் கிடையாது,
நட்புக்குள் தவறுகள் நடக்காது,
நட்புக்குள் தன்னலம் இருக்காது,
நட்புக்கு ஆண் பெண் தெரியாது,
நட்பு என்னும் நூல் எடுத்து,
பூமிய கட்டி நீ நிறுத்து,
நட்பு நட்புதான்,
காதல் காதல்தான்,
காதல் மாறலாம்,
நட்பு மாறுமா?



கவிஞர் சினேகன் எழுதிய இப்பாடலில் ஒரு ஆணுக்கும், பெண்ணுக்கும் இருக்கும் நட்பை சிறப்பாக சொல்லி இருப்பார்.

ஆக ஒரு ஆணும் பெண்ணும் கண்டிப்பாக இறுதி வரை நட்பாக பழக முடியும்..... அவர்களின் குடும்பம்,உற்றார், உறவினர்கள் நட்பாளர்களை தவறாக என்னாமல் அவர்கள் மீது நம்பிக்கை வைத்திருத்தலும் இங்கே அவசியமாகும்.

எந்த பலனும் எதிர்பாராமல் துன்பத்தில் தோள் கொடுத்து, இன்பத்தில் பங்கு கொள்பவன் நட்பிற்கு வயது கிடையாது, பாலினம் கிடையாது, மதம் கிடையாது, ஜாதி கிடையாது, மொழி கிடையாது, நாடு கிடையாது, பணமில்லை, பயமில்லை, உறவுகளும் இல்லை.

நட்பு என்றுமே அழகான ஒன்று. அதை நன்றா வைத்திருப்பது அவசியம். ஒரு நல்ல நட்பை இழந்தால் அதனால் வரும் துன்பம் சொல்லில் அடங்காது.



ஆடுகளம்

# ஆடுகளங்களின் அதிர்வுகள்

இராஜேஸ் மணாளன்

## லேவர் கிண்ணம் யாருக்கு?



டென்னிஸ் உலகில், லேவர்(Laver Cup)கிண்ணத்திற்காக, உலக அணியுடன் ஐரோப்பா அணி வருடாவருடம் மோதி வருகின்றது. இந்தவருடம் ஐரோப்பா அணயில் விளையாடுவதற்காக ரபேல் நடால், ரோஜர் பெடரர், அன்டி முர்ரே, நோவக் ஜொக்கோவிச்சுடன் இணையவுள்ளார்.

உலக அணியில் ஆறு வீரர்களும், ஐரோப்பிய அணியில் ஆறு வீரர்களுமாக, ஒருவரோடு ஒருவர் மோதும் இந்த லேவர் கிண்ணத்திற்கான மோதல், எதிர்வரும் செப்டெம்பர்23-25 ஆம் திகதிகளில் லண்டன் மாநகரில் இடம்பெறவுள்ளன.

இதுவரையில் பெலிக்ஸ் அகர் (Felix Auger&Aliassime), அலயாசிம் ரெய்லர் பிரிட்ஸ்( Taylor Fritz) டியாகோ ஸ்ஹ்வார்ட்ஸ்மான்(Diego Schwartzman) ஆகியோர் உலக அணிக்காக இணைந்துள்ளனர்.

ரோஜர் பெடரரின் திட்டத்தில் உருவாகிய இந்தத் தொடர், முதற் தடவையாக 2017இல் இடம்பெற்றது. முதற் தடவையாக பெரிய நான்கு தலைகள்(Big Four) என்று வர்ணிக்கப்படும்,

Roger Federer, Andy Murray, Novak Djokovic, Rafael Nadal என்ற நான்குபேரும், லண்டனிலுள்ள O2 ஆடுகளத்தில் இணைந்து ஒரே அணிக்காக ஆடவுள்ளார்கள்..இந்த நால்வரும் கடந்த காலங்களில் விளையாடப்பட்ட 76கிரான்ட் ஸ்லாம் மோதல்களில், 66ஐ தமதாக்கியுள்ளார்கள்....நடால் 22 தடவைகளும், ஜொக்கோவிச் 21 தடவைகளும், பெடரர் 20 தடவைகளும், மர்ரே 3 தடவைகளும் கிரான்ட் ஸ்லாம் கிண்ணத்தை வென்றெடுத்துள்ளார்கள்.



## ஆறு ஆண்டுகளின் பின்னர் சிம்பாவே

இந்திய கிரிக்கெட் அணி, தற்பொழுது மேற்கிந்திய தீவுகளில் உள்ளது. அந்த அணியுடன் 3 ஒருநாள் போட்டி மற்றும் 3 ரி20 போட்டிகளில் இந்தியா விளையாடுகின்றது.

ஆகஸ்ட்7 அன்று இந்தத் தொடர் முடிவடைகின்றது. அடுத்து ஆறு ஆண்டுகள் இடைவெளியில், ஆகஸ்ட் மாதம் இந்த அணி சிம்பாவே பயணமாகின்றது. இந்தத் தொடருக்கு லோகேஷ் ராகுல் அணித் தலைவராக நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஆகஸ்ட் 18,20,22ஆம் திகதிகளில், தலைநகரான ஹராரேயில் ஒருநாள் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

ரி20 உலகக் கிணணத் தொடர் இந்த வருடம் ஒக்டோபர் மாதம் அவுஸ்திரேலியாவில் இடம்பெறவுள்ளது. இதற்கு தம்மைத் தயார்படுத்தும் முகமாக, வெவ்வேறு வீரர்களின் அணித் தலைமையில், இந்தியா ரி20 தொடர்களை விளையாடி வருகின்றன.

## ராவல்பிண்டி எக்ஸ்பிரஸ்



பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் வேகப்பந்துவீச்சாளர் சோயிப் அக்தர். இவர் பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்காக 46 டெஸ்ட், 163 ஒருநாள் மற்றும் 15 டி20 போட்டிகளில் விளையாடி முறையே 178, 247 மற்றும் 19 விக்கெட்டுகளை வீழ்த்தி அசத்தியுள்ளார்.

இவரின் விக்கெட் வீழ்த்தும் திறனை விட இவர் வீசும் பந்தின் வேகத்தை கண்டு முன்னணி கிரிக்கெட் ஜாம்பவான்கள் கூட அஞ்சி உள்ளனர். குறிப்பாக 2002 ஆம் ஆண்டு நியூசிலாந்து அணிக்கு எதிராக 161 கிலோ.மீ வேகத்தில் அக்தர் வீசிய பந்து தான் தற்போது வரை கிரிக்கெட்-யில் வீசப்பட்ட வேகமான பந்தாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் தற்போது இவரின் வாழ்கை வரலாறு ‘ராவல் பிண்டி எக்ஸ்பிரஸ்’ என்ற பெயரில் திரைப்படமாக எடுக்கப்படுகிறது. இந்த திரைப்படத்தை முஹம்மது ஃபராஸ் கெய்சர் என்பவர் இயக்குகிறார். சோயிப் அக்தர் பாகிஸ்தானின் ராவல்பிண்டி என்ற இடத்தில் பிறந்ததாலும், அதிவேகமாக பந்துவீசியதாலும் இவருக்கு ஏற்கனவே ‘ராவல்பிண்டி எக்ஸ்பிரஸ்’ என்ற பெயரால் அறியப்பட்டவர். இந்த நிலையில் அதே பெயரில் இவரின் வாழ்கை வரலாறு திரைப்படமாகிறது.

## தகர்ந்தது சாதனை



மே.இந்திய தீவுகளுக்கு எதிரான இரணடாவது ஒரு நாள் போட்டியில் வென்ற இந்திய அணி,ஒரு நாள் தொடரில் ஓர் அணிக்கு எதிராக தொடர்ந்து அதிக பட்ச வெற்றிகள் பெற்று , பாகிஸ்தான் அணியின் சாதனையை முறியடித்து, புதிய சாதனையாளராகி இருக்கின்றது.

சமீபத்தில் இரண்டு விக்கெட்டுகள் வித்தியாசத்தில் மே.இந்திய அணியைத் தோற்கடித்தமை மூலம், இந்தியா தொடர்ந்து 12 முறை வெற்றிகள் பெற்றுள்ள சாதனையை நிலைநாட்டியுள்ளது. அத்துடன் இந்திய அணி 3 போட்டிகள் கொண்ட தொடரில் இரண்டை வென்று தொடரைக் கைப்பற்றியுள்ளது.

இதற்கு முன்னர் பாகிஸ்தான் அணி, சிம்பாவே அணிக்கு எதிராக 11முறை தொடர்ந்து வெற்றிகளைப் பெற்றிருந்தது.

ஒரு நாள் தொடர் போட்டிகளில் , ஒரு அணிக்கு எதிராக எடுத்த அதிக பட்ச வெற்றிகளின் விபரம் வருமாறு....

**12 வெற்றிகள்-**
இந்தியா-மே.இந்திய தீவுகள்
(2007-2022) 11 வெற்றிகள்.
பாகிஸ்தான்-சிம்பாவே (1996-2021)
**10 வெற்றிகள்**
பாகிஸ்தான்-மே.இந்திய தீவுகள் (1999-2022)
**9 வெற்றிகள்**
தென் ஆபிரிக்கா-சிம்பாவே(1995-2008)
9 வெற்றிகள்
இந்தியா-இலங்கை(2007-2021)

## ஹர்திக் பாண்டியா விரைவில் ஓய்வு

ஹர்திக் பாண்டியா கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு அறிவிக்க வாய்ப்பு இருப்பதாக இந்திய அணியின் முன்னாள் பயிற்சியாளர் ரவி சாஸ்திரி அதிர்ச்சி தகவலை தெரிவித்துள்ளார்.

ஹர்திக் பாண்டியா கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு அறிவிக்க வாய்ப்பு இருப்பதாக ரவிசாஸ்திரி கூறியிருக்கிறார். இந்திய அணியின் முன்னாள் பயிற்சியாளரான அவர், 2023 ஆம் ஆண்டு உலகக்கோப்பைக்குப் பிறகு, அவர் பென்ஸ்டோக்ஸ் போல் ஒருநாள் போட்டிக்கு விடை கொடுக்க அதிக வாய்ப்புகள் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

நிகழ்ச்சி ஒன்றில் ரவிசாஸ்திரி பேசும் போது, ‘இன்றைய காலகட்டத்தில் போட்டிகள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

சர்வதேச போட்டிகள் மற்றும் கிரிக்கெட் லீக்குகள் அதிகம் இருப்பதால், தொடர்ச்சியாக வீரர்களால் விளையாட முடியாது. டெஸ்ட், ஒருநாள் மற்றும் 20 ஓவர் போட்டி என மூன்று வடிவங்களிலும் அனைத்து வீரர்களாலும் விளையாட முடியாது.

இது வீரர்களுக்கு மனதளவிலும், உடலளவிலும் மிகப்பெரிய சோர்வை ஏற்படுத்தும். விளையாட்டின் முக்கியத்துவத்தால் டெஸ்ட் கிரிக்கெட் எப்போதும் இருக்கும். ஆனால், எந்த ஃபார்மேட்டில் விளையாட வேண்டும் என்பதை தேர்ந்தெடுக்கும் நிலைக்கு வீரர்கள் தள்ளப்பட்டுள்ளனர். ஏற்கனவே, எந்த பார்மேட்டில் விளையாட வேண்டும் என தேர்தெடுக்கும் வீரர்களும் உள்ளனர். ஹர்திக் பாண்டியா கூட 20 ஓவர் போட்டிகளில் விளையாடுவதை அதிகம் விரும்புகிறார். அந்தப் போட்டிகளைத் தவிர வேறு போட்டிகளில் விளையாட நான் விரும்பவில்லை என்பதில் அவர் தெளிவாக இருக்கிறார்.

## உயரம் தாண்டி புதிய உலக சாதனை

18-வது உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டி அமெரிக்காவின் ஒரேகான் மாகாணத்தில் யூஜின் நகரில் நடந்தது.

10 நாட்கள் நடந்த இந்த போட்டியில் கடைசி நாளில் நடந்த ஆண்களுக்கான போல்வால்ட் (கம்பு ஊன்றி உயரம் தாண்டுதல்) பந்தயத்தின் இறுதி சுற்றில் 12 பேர் போட்டியிட்டனர். இதில் டோக்கியோ ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வென்றவரான அர்மன்ட் டூப்ளாண்டீஸ் 6.21 மீட்டர் உயரம் தாண்டி தனது சொந்த சாதனையை தகர்த்து புதிய உலக சாதனையுடன் தங்கப்பதக்கத்தை கைப்பற்றினார். உலக உள்ளரங்க போட்டியில் சாம்பியனான அவர் உலக தடகள சாம்பியன்ஷிப்பில் தங்கப்பதக்கம் வெல்வது இதுவே முதல்முறையாகும். அமெரிக்க வீரர் கிறிஸ்டோபர்




நில்சென் 5.94 மீட்டர் உயரம் தாண்டி வெள்ளிப்பதக்கமும், பிலிப்பைன்ஸ் வீரர் எர்னஸ்ட் ஜான் ஒபினா 5.94 மீட்டர் உயரம் தாண்டி வெண்கலப்பதக்கமும் பெற்றனர். பெண்களுக்கான 100 மீட்டர்தடை ஓட்டத்தில் கென்யா வீராங்கனை டொபி அமுசென் 12.06 வினாடியில் பந்தய தூரத்தை கடந்து தங்கப்பதக்கத்தை வென்றார். பெண்களுக்கான 400 மீட்டர் தொடர் ஓட்டத்தில் அமெரிக்க அணி (3 நிமிடம் 17.79 வினாடி) தங்கப்பதக்கமும், ஜமைக்கா அணி வெள்ளிப்பதக்கமும், இங்கிலாந்து அணி வெள்ளிப்பதக்கமும் பெற்றன. போட்டியின் முடிவில் பதக்கப்பட்டியலில் அமெரிக்கா 13 தங்கம், 9 வெள்ளி, 11 வெண்கலம் என 33 பதக்கங்களுடன் மீண்டும் முதலிடத்தை சொந்தமாக்கியது. எத்தியோப்பியா 4 தங்கம், 4 வெள்ளி, 2 வெண்கலப்பதக்கத்துடன் 2-வது இடத்தை பிடித்தது. இந்தியா, நீரஜ் சோப்ரா வென்ற ஒரே வெள்ளிப்பதக்கத்துடன் 33-வது இடத்தை 5 நாடுகளுடன் இணைந்து பெற்றது. அடுத்த உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டி ஹங்கேரி தலைநகர் புடாபெஸ்டில் அடுத்த ஆண்டு (2023) ஆகஸ்டு 19-ந் தேதி முதல் 27-ந் தேதி வரை நடக்கிறது.

# அன்று இராணுவ உடைக்கு இருந்த மரியாதை தற்போது இல்லை

## ஜூலை 9 இல் சீருடையை கழற்றிய இராணுவ வீரர்

அன்று இராணுவ உடைக்கு இருந்த மரியாதை தற்போது இல்லை என்று ஜூலை 9 இல் சீருடைய கழற்றி எறிந்து விட்டு மக்களுடன் இணைந்து போராட்டத்தில் ஈடுபட்ட சிறப்பு அதிரடிப்படையைச் சேர்ந்த அசேல சஞ்சீவ பாலசூரிய தெரிவித்துள்ளார்.

ஜூலை 9 ஆம் திகதி, நாடு தழுவிய போராட்டங்களின் போது பல காவல்துறை மற்றும் இராணுவ அதிகாரிகள் பொதுமக்களின் பக்கம் நின்று தங்கள் கடமைகளை ஓரங்கட்டுவதாக செய்திகள் வெளிவந்தன. இளம் இராணுவ வீரர் ஒருவர் தனது சீருடையை கழற்றி மக்களுடன் இணைந்து போராட்டத்தில் குதித்த காணொலி ஒன்று சமூக வலைதளங்களில் பரவி வந்தது.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்களுடன் இணைந்த பின்னர் அவரின் வாழ்க்கை எவ்வாறு செல்கின்றது என்று அறிந்து கொள்வதற்காக சிங்கள நாளிதழ் ஒன்று அவருடன் தொடர்பு கொண்டு எடுத்த நேர்காணலின் முக்கிய பகுதிகளை உங்களுக்கு தருகின்றோம்.

குருநாகலை பிறப்பிடமாகக் கொண்ட நான் சிறப்பு அதிரடிப்படையில் பணியாற்றி வந்தேன். எனது பெயர் அசேல சஞ்சீவ பாலசூரிய. வயது 24.

நாட்டுக்கு சேவை செய்ய இராணுவத்தில் இணைந்தேன். சிறு வயதில் இருந்தே நான் கண்ட கனவு இது.

மருதானை இராணுவத் தலைமையகத்தில் பணியாற்றினேன்.






### காற்று வாக்கில் காதில் விழுந்தது...

**மாற்றுமொழி பேசும் ஊடகத்துறை என்ன சொல்கிறது?**

**? உண்மையில் அன்று நடந்தது என்ன?**

முதல் நாளே ஆர்ப்பாட்டம் நடத்துவதற்காக நாட்டின் பல பாகங்களில் இருந்தும் கொழும்புக்கு வருவார்கள் என்று கூறப்பட்டது. அதனால், நாட்டின் பாதுகாப்பு கருதி, 8 ஆம் திகதி தொடக்கம் இலங்கை வங்கி வீதியில் பாதுகாப்பு பணிக்காக நிறுத்தப்பட்டேன்.

9 ஆம் திகதி காலையில இருந்தே மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. வயதான தாய்மார்கள், அப்பாக்கள், எங்களைப் போன்ற இளைஞர்கள் இராணுவத்தில் உள்ள தங்களின் துயரங்களைச் சொல்லி அழத் தொடங்கினார்கள். அதனால் அவர்கள் பக்கம் நான் நிற்க வேண்டும் என்று அப்போது உணர்ந்தேன். அதனால் தான் இராணுவ சீருடையை கழற்றி எறிந்து விட்டு அவர்களுடன் இணைந்தேன்.

**? உங்களை அங்குள்ள மக்கள் தம்முடன் இணையுமாறு கட்டாயப்படுத்தினார்களா?**

இல்லை, அந்த நேரத்தில் என் இதயம் உணர்ந்ததை நான் நேர்மையாக செய்தேன். இது யாருடைய ஆலோசனையிலோ அல்லது தூண்டுதலிலோ செய்யப்படவில்லை. இந்த நாட்டில் உள்ள அப்பாவி மக்களின் வரிப்பணத்தில் வாழ்கின்றோம். நாட்டைக் காக்க இராணுவத்தில் இணைந்தேன்.

அநியாயங்கள் நடக்கும் போது கண்ணை மூடிக்கொண்டு இருப்பது எமது நாட்டுக்கும் மக்களுக்கும் கடினம். நாங்களும் இந்த நாட்டின் பொதுமக்கள்தான். அதனால்தான் நான் அவர்களுக்கு ஆதரவாக நின்றேன்.

**? சீருடையை கழற்றிய பின்னர் அந்த நேரத்தில் அங்கு என்ன நடந்தது?**

கூட்டம் வெகுநேரம் என்னைச் சூழ்ந்து கொண்டது. சிலர் என்னைக் கட்டிப்பிடித்து அழுதார்கள்.

**? இந்த சம்பவத்தின் காணொலியும் சமூக வலைதளங்களில் பகிரப்பட்டதா?**

ஆம். அதனைப் பார்த்துவிட்டு பலர் எனது இலக்கத்தினை கண்டுபிடித்து அழைத்தார்கள். உண்மையில் அன்று பல அழைப்புகள் வந்ததால் என்னால் பதில் சொல்ல முடியவில்லை.

**? அவ்வாறு செய்ததால் வேலை போய் விடுமோ என்று நீங்கள் அச்சப்படவில்லையா?**

அந்த நேரத்தில் எனது சீருடையை கழற்றினேன், எதனையும் எதிர்கொள்ள தயாராகவே இருந்தேன்.

**? பின்னர் இராணுவத் தளபதிகள் உங்களை அழைத்து குற்றம் சாட்டினார்களா?**

இல்லை. பலர் தொலைபேசியில் அழைத்து விபரம் கேட்டனர். ஆனால் யாரும் என்னை குறை சொல்லவில்லை.

**? தற்போது நீங்கள் இராணுவத்தில் இருந்து நீக்கப்பட்டுள்ளீர்கள். இல்லையா?**

ஜூலை 9 சம்பவத்துக்கு மறுநாள் நான் எனது நண்பனுடன் சென்று எனது சீருடைகளை இராணுவத் தலைமையகத்தில் ஒப்படைத்துவிட்டு வீட்டுக்குச் சென்றேன்.

சம்பவம் நடந்த அதே நாளில் இருந்து நான் பணியில் இருந்து நீக்கப்பட்டதாக ஒரு கடிதம் வீட்டிற்கு வந்தது. எனது ஊதியமும் நிறுத்தப்பட்டது.

**? இது தொடர்பாக உங்கள் குடும்பத்தினர் என்ன சொன்னார்கள்?**

எனது அம்மா, அப்பா மற்றும் சகோதரி வீட்டில் உள்ளனர். நான் செய்ததை நினைத்து எனது குடும்ப உறுப்பினர்கள் பெருமைப்படுகிறார்கள். ஆனால், வேலையை இழந்ததால் கொஞ்சம் வருத்தம்தான்.

**? உங்களை திடீரென வேலையை விட்டு நீக்கியதால் வீட்டுப் பொருளாதாரத்தை பாதிக்கவில்லையா?**

தந்தையும் தொழில் புரிகின்றார். அவ்வாறு கூறுவதனால் எங்களிடம் அதிக பணம் இருப்பதாக எண்ண வேண்டாம். அதேபோன்று சேமிப்பு பணமும் எம்மிடம் எதுவும் இல்லை.

ஆனாலும், இந்த வேலை பறி போனாலும் வீட்டில் பொருளாதாரத்துக்கு பிரச்சனை வராது என்று நினைக்கின்றேன். ஏனென்றால் என்னால் வேறு வேலை செய்ய முடியாது.

**? முன்னொரு காலத்தில் எமது மக்கள் இராணுவத்தை தெய்வத்துக்கு சமமாக நடத்தினார்கள். ஆனால், தற்போது அந்த நிலை மாறிவிட்டது. இந்த வித்தியாசத்தை உணர்கின்றீர்களா?**

கண்டிப்பாக. சிறுவயதில், இராணுவத்தில் உள்ள யாராவது ஒருவர் வீதியில் நடந்து சென்றால் எமது உள்ளம் மலரும். அந்த மரியாதை எமக்கும் நடைபெற்றது. பலர் எங்களைப் பார்த்து மகிழ்ச்சியடைந்தனர். ஆனால், தற்போது மக்களுக்கு விரக்தி மட்டுமே உள்ளது என்பதை மக்களின் எதிர்வினைகளில் இருந்து உணர்ந்து கொண்டேன்.

**? எடுத்த முடிவை நினைத்து தற்போது வருத்தப்படுகின்றீர்களா?**

இல்லை. வருத்தமும் இல்லை. இராணுவ சிறப்பு அதிரடிப்படை மிகவும் சிறப்பு வாய்ந்தது. அந்த பயிற்சிக்காக பல மாதங்கள் கஷ்டப்பட்டேன். அதனால், அன்புடன் உடுத்திய உடைகள் துன்பப்பட்டுப் போய்விட்டதே என்ற வருத்தம் கொஞ்சம் உண்டு. ஆனால், எனது மக்களுக்காகத்தான் அப்படிச் செய்தேன் என்று நினைக்கும் போது அந்த வருத்தமும் காணாமல் போய் விடுகின்றது.

**? மீண்டும் அந்த சீருடையை அணிய வாய்ப்பு கிடைத்தால், அதை ஏற்றுக் கொள்வீர்களா?**

ஆம். எப்போதாவது ஒரு போர் நடந்தால், நான் நிச்சயமாக நாட்டுக்காக மீண்டும் போரில் ஈடுபடுவேன்.




**இத்திங்களின் இன்னுமொரு பக்கம்**

விடைபெறுகிறது ஜூலை...


# ஜூலை மாதத்தின் முக்கிய சர்வதேச தினங்கள்




ஜூலை 01 தேசிய மருத்துவர்கள் தினம்




ஜூலை 02 உலக UFO (பறக்கும் தட்டு) தினம்




ஜூலை 03 செயின்ட் தாமஸ் தினம்




ஜூலை 03 உலக சைக்கிள் தினம்




ஜூலை 04 அமெரிக்க சுதந்திர தினம்







ஜூலை 06 உலக முத்த தினம்




ஜூலை 07 உலக சாக்லெட் தினம்





ஜூலை 11 உலக மக்கள் தொகை தினம்




ஜூலை 12 உலக மலாலா தினம்





ஜூலை 15 உலக இளைஞர் திறன் தினம்




ஜூலை 17 சர்வதேச நீதி தினம்




ஜூலை 15 (ம) கல்வி வளர்ச்சி தினம்




ஜூலை 18 உலக நெல்சன் மண்டேலா தினம்

# சிரிக்க... சிந்திக்க...

## கடந்து போக....









